நாசகார சமூகம்.

எம். என். ராய்
ஆங்கிலத்தில் எழுதியது.

★

தமிழாக்கம் :
"ஜோதிமோஹன்"

★

அறிவுச்சுடர் பதிப்பகம்,
துறையூர்.

முதற் பதிப்பு:—1947

விலை: 8 அணு

துறையூர் ஸ்ரீ நட்ராஜா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

பதிப்புரை.

"இந்தியாவின் மர்ம மனிதன்" என்று அறிஞர்கள் பலரால் புகழ்ந்துகூறப்பட்டவர் வீரத்தியாகி எம். என். ராய். பல நாடுகளில் பல மாறுபெயர்களுடன் சஞ்சரித்து அந்நாட்டு மக்களுடன் இரண்டறக் கலந்து, அவர்களுடைய பண்பு, நாகரிகம், கலை, அறிவு, ஆற்றல் முதலிய அனைத்தையும் கூர்ந்து நோக்கி அவற்றை இந்தியாவின் நிலையோடு ஒப்பிட்டுப்பார்த்து இந்தியாவின் முன்னேற்றத்திற்கு, சுபிட்சத்திற்கு, சுதந்திர வேகத்திற்கு அவற்றை எவ்வளவு தூரத்திற்கு உபயோகித்துக்கொள்ளலாம் என்று ஆராய்ந்தவர். அந்த ஆராய்ச்சியின் பலன் அனுபவம். இவையே இப்புத்தகம் தோன்றியதற்குக் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

நம் சமூகத்திலே நீண்டகாலமாக புரைையோடிப்போன பழக்க வழக்கங்களை, ஊழல்களை, அட்டூழியங்களை, ஆபாசங்களை அலசி எடுத்துக்காட்டுகிறார் அப் புரட்சி வீரர். அவை கசப்பான உண்மையாயிருக்கலாம். ஆனால் மறுக்கக் கூடாதவை.

நம் சமூகத்தில் நிலையாக வேரூன்றிவிட்ட ஆண்டான்-அடிமை, ஆண்-பெண், உயர்ஜாதி-கீழ்ஜாதி என்ற பாகுபாடுகளைத் தகர்த்தெறிந்து புத்துலகைச் சிருஷ்டிக்கும் சேவையில் எங்களாலான பணியை - இத்தகைய வெளியீடுகளை வெளியிடுவதின் மூலம் - செய்ய முன்வந்துள்ளோம். இங்ஙனமாய அறிவியல் நூல்களின் மூலம் மக்களுள்ளத்தில் மறைந்து கிடக்கும் அறிவுச்சுடரைத் தட்டி எழுப்புவது எங்கள் நோக்கம்.

எங்களுடைய இந்த முயற்சிக்குத் தமிழன்பர்களின் ஆதரவுகிடைக்கும் என்று நம்புகிறோம்.

— பதிப்பாளர்கள்.

நாசகார சமூகம்.

"மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை" என்ருர் ஆங்கிலப் பேரறிஞர் ஒருவர். மதம் அபினைப் போன்றது. மதியை மயக்கவல்லது. மனிதனை மிருகவெறி கொள்ளச் செய்வது. இன்று நாட்டிலே நடைபெறும் கலவரங்களுக்கு பெரும் அளவு மதந்தான் காரணமாகும். இதை உணர்ந்தே தலைவர்கள் பலர் முதலில் மதவெறியை ஒழிக்கவேண்டும் எனத்திட்டமிட்டு முயன்றுவருகிருர்கள் மனிதனுடைய நாசத்துக்கு, அநாகரீகத்துக்கு, பகுத்தறியாமைக்கு, அடிமைக்கு மதவெறி எவ்வளவு தூரம் துணை புரிகிறதோ அந்த அளவுக்கு சமூகம் உடன் முழக்கு முழங்குகிறது. சமூகத்தின் கொடுமைக்கு, கொலை பாதகத்துக்கு பயந்துகொண்டு மக்கள் தன் உணர்வையே பலிகொடுக்கிருர்கள். பீறிக்கொண்டு எழும் யௌவன உணர்ச்சியையும், இரக்கத்தின் விளைவாக எழும் அன்பு உணர்ச்சியையும் அது அடக்கிவிடுகிறது. சமூகக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்து தலைநிமிர்ந்து தன்மரியாதைப்படி நடப்பவனை "பகிஷ்காரம்" என்ற சமூகத்தின் வெடிகுண்டு வெகுண்டு பார்க்கிறது. சட்டங்கூட அவர்களை வெறித்துப்பார்க்கிறது இந்த சட்டங்களை உண்டாக்கியது யார்? அந்த சமூக வெறியர்கள்தான். ஆபாசத்திலே உழன்று புழுத்து நாறி நெளியும் புழுக்களைப் போன்ற அவர்களுடைய காட்டுமிராண்டித் தனமான கட்டுப்பாடுதான் மனுஸ்மிருதியாகவும், தற்கால சட்டங்களாகவும் காக்ஷியளிக்கிறது. இச்சமூகச் சட்டங்களையும், கட்டுகளையும் உதறித்தள்ளவேண்டும். வானத்தையளாவ தீ மூட்டி அதன் மத்தியில் போட்டு பொசுக்க வேண்டும். எட்டுத் திக்கும் தீ பரவவேண்டும்.

தூக்குத்தண்டனை ஏன்? :: ::

நாம் சொல்லப்போகிற சில கேசுகள் ஐந்து சிறைகளில் இருக்கும் குற்றவாளிகளின் சம்பந்தமான வழக்குகளிலிருந்து அங்கொன்று இங்கொன்றுமாக பொறுக்கி எடுக்கப்பட்டவை. அவை இந்தியாவில் குற்றங்கள் செய்யப்படுவதற்கு சமூக அமைப்பின் அடிப்படை எவ்வளவு தூரம் காரணமாயிருக்கிறது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. உலகின் எந்த பாகத்திலும் குற்றம் சமூகக் கொடுமையினலே ஏற்படுகிறது. குற்றவாளிகள் என்று தண்டிக்கப்படும் தனிப்பட்ட மனிதர்கள் இந்தக் குற்றங்களைச் சமூகத்துக்கு விரோதமாகச் செய்வதில்லை. அவை சமூகத்தின் குற்றங்களேயாகும். சமூக அநியாயத்தால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் சமூகத்தின் சட்டங்களினல் பலியிடப்படுகின்றனர். சமூகக் கொடுமையின் அவலக்ஷணமான குழந்தையே குற்றமாகும். ஒரு தேசத்தின் சமூக அமைப்பின் மாறுபாட்டிற்கு ஏற்ப குற்றத்தின் வகையும் மாறுபடும். நாம் பொறுக்கி எடுத்திருக்கும் கேசுகள் இந்தியாவில் சாதாரணமாக நடப்பவை. விசித்திரமான! இந்ததேச சமூகத்தில்தான் இந்த குற்றங்கள் நடக்கமுடியும். வேறுபட்ட சமூக நிலையிலும், பழக்கத்திலும் இந்த ஆண்களும் பெண்களும் இருந்திருந்தால் அவர்கள் தூக்கிலிடப்பட மாட்டார்கள் வேறுவிதமாகவும் தண்டிக்கப்படமாட்டார்கள். அவர்கள் செய்த குற்றத்திற்கு நோக்கம் இந்திய சமூகத்தில் நிலைத்துவிட்ட சில அமைப்புகளினலும், சில செய்கைகள் பரம்பரையாக இழிவாக சமூகத்தினல் கருதப்பட்ட காரணங்களினலும் உற்பத்தியாயிற்று. இவற்

றிற்கு மூலகாரணம் மனித இயற்கையினல் உண்டாக வில்லை. ஆனல் இந்திய பரம்பரை ஆசாரத்தினல் உண்டாயிற்று. இந்தியர்களின் பழக்க வழக்கங்களும் இந்தியர்களின் மனோபாவமும் இந்தக் குற்றங்களுக்குக் காரணம்

I

அவன் ஒரு புத்திசாலியான பையன். வயது இருபதுக்கு மேல் அதிகமிராது, உயர்ந்த ஜாதியில் பிறந்தவன், அவனுடைய குடும்பத்தினர் மிராசுதாரர்கள். அவனுடைய தாய் தந்தையர் அவனை மேல் படிப்புக்காக அந்த கிராமத்தில் முதன் முதலாக அவனைக் கலாசாலைக்கு அனுப்பியிருந்தார்கள். மேல் படிப்பின் பயனைப் பெறுவதற்காக அவன் குவுமான் மலைப்பிரதேசங்களிலுள்ள தன்னுடைய கிராமத்தை விட்டு விட்டு ஒரு பெரிய நகரத்துக்குப் போகவேண்டியிருந்தது. தன்னுடைய சொந்த கிராமத்திலிருந்து மிகவும் மாறுபட்ட நிலையில் அவன் இரண்டு வருஷங்கள் இருந்ததால் விஷயங்களை சுலபமாக மேற்கொள்ளும் இளமைப் பருவத்தின் உணர்ச்சி ஆவேசத்தில் அவன் கொள்கைகள் மாறுபாடு அடைந்தன. அவன் கிராமத்துக்குத் திரும்பியபோது அவனுக்குப் புதிய எண்ணங்கள் அதிகமில்லை; ஆனல் கிராம வாழ்க்கையில் அவனை நாசத்தில் சேர்க்கும்படி அவனுடைய விருப்பங்களும், உணர்ச்சிகளும், தட்டி எழுப்பப்பட்டிருந்தன. மரண தண்டனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது நான் அவனைப் பார்த்தேன். அவன் சந்தோஷமாக இல்லாவிட்டாலும் தவிர்க்க முடியாத தண்டனையைப்பற்றி அதிக கவலைப்

படாமல் இருந்தான். அவனுடைய பாபத்திற்கு ஈடாக தண்டனையைப் பெறப்போவதில் கவலைப்படவில்லை என்று அவன் வெளிப்படையாக சொன்னான். அது கடவுளின் சித்தமென்றும், கர்மபலன் என்றும், அவன் சமாதானம் சொன்னான்.

அவன் தூக்குத் தண்டனையடைவதற்கு செய்த குற்றம் என்ன? அவன் காதலில் விழுந்ததுதான் இளமைப் பருவத்தில் நவீன கொள்கையில் வளர்ந்ததால் உணர்ச்சியின் அடிப்படையான சரீர சேர்க்கையின் மீதிருக்கும் கட்டுப்பாட்டை அவன் ஓரளவு பொருட்படுத்தவில்லை தற்காலத்திய இந்திய இளைஞர்கள் வேறு விஷயங்களில் நவீன நாகரீகத்தை அடைந்திருந்தபோதிலும், பெண்கள் விஷயமான மனோ எழுச்சியைப் பற்றி அவமானப்படக்கூடிய விஷயமாகவே கருதுவதுபோல் அவனும் கருதினான். துரதிர்ஷ்ட வசமாக கிராமத்தின் சமூகக் கட்டுப்பாடு அவனை இதைவிட மிகவும் அவமானப் படக்கூடிய செய்கையில் இறக்கியது. அவன் தன் சகோதரியுடன் கூடாநட்புக்கொண்டான்; இந்த அடாத காரியத்தைச் செய்தான்.

அவன் இதைச் செய்தானோ அல்லது செய்யவில்லையோ என்பதில் அதிக வித்தியாசம் இல்லை. ஆகையால் இதைப்பற்றி ஆதாரங்களைக்கொண்டு நிரூபிக்கவேண்டியதில்லை. சமூகக் கட்டுப்பாடு இருந்த நிலைமையில் அவனுடைய இயற்கையான உணர்ச்சியை செலுத்த வேறு வழியில்லாததால் இந்த செய்கைக்கு அவன் இறங்க வேண்டியிருந்தது என்பதுதான் கவனிக்கவேண்டியது. கிராமத்தார்கள் நிதானித்து இந்த இயற்கைக்கு விரோ

தமான, ஒழுக்கமற்ற, பாவச்செய்கை ஏன் ஏற்பட்டது என்று ஆலோசிக்கவில்லை; அதற்கு மாருக இதைச் சமூகத்துக்கு அவமானமாகக்கருதி மிகுந்த கோபமடைந் தார்கள். காதல், அவமானம் என்ற இரண்டு பலத்த உணர்ச்சிகளும் அந்த இளைஞன் மனதில் பெரிய போராட்டத்தை எழுப்பி அவனைப் பயித்தியமாக்கியிருக் கவேண்டும். சமூகத்தாரின் இரக்கமற்ற சித்திரவதை போன்ற துன்பத்தினின்று தப்பமுடியாது என்ற எண் ணம் அவனைத் துணிவுமிக்கவனுகச் செய்திருக்கவேண் டும். உதவியும், நம்பிக்கையும் இழந்து அவன் தன் வாழ்க்கை முழுவதும் அவமானத்தையும் கொடுமையை யும் அனுபவிக்காமலிருக்கும்படி தான் நேசித்த பெண்ணை அவன் கொலை செய்தான். அவன் தன்னைத் தற்கொலை செய்துகொள்ளவில்லை; ஏனென்ருல் தன்னு டைய பாபத்திற்கு சரியான தண்டனையை அடையவிரும் பினன். தன் காதலியை சமூகக்கொடுமை எட்டாத இடத்திற்கு அனுப்பிவிட்டு, தன்னை போலீசார் வசம் ஒப்புவித்தான். மனமுடையச் செய்யும் இந்த சோகக் கதையின் நாயகன் முடிவாகத் தூக்குமேடைக்குச் சென் ருன். தூக்குமேடையில் ஏறும்போது அவன் தன் செய் கைக்கு வருந்தவே இல்லை

யௌவன வனப்பு அப்பொழுதுதான் மலர்ந்திருந்த இளவயதில் விதவையாகிய தன்னுடைய சகோதரியின் மீது அவன் காதல் கொண்டான். ஆ! இது எவ்வளவு பயங்கரமானது! அருவருப்பானது! கௌரவமான மனி தர்கள் இந்த ஒழுக்கத் தவறுதலைக்கேட்டு கோபமடை யாமலிருக்க முடியாது ஆனல் தெய்வாதீனமாக இத்த கைய அருவருப்பான அசாதாரணமான துர்க்கிரித்தியங்

கள் மிகவும் குறைவு. இந்தியக் கலையும் சமூக சட்டங்களும் இத்தகைய அசங்கிதமான ஒழுக்கத் தவறுதல்களை சம்பவிக்காமல் தடுக்கிறது. ஒழுக்கம் என்பதை மாத்திரம் வைத்துக்கொண்டு இதன்மீது தீர்ப்புச்செய்யாமல் இந்த சம்பவம் நேர்ந்ததற்குக் காரணங்கள் யாவை என்று யோசித்துப்பார்த்தால் இத்தகைய சோகக் கதைகள் நேர்வதற்குக் காரணமான கேவலமான நிலைமையைப் பற்றி நாம் வேறுவிதமாக நினைக்கவேண்டிவரும்.

அந்த இளைஞன் நகருக்கு மேல் படிப்புக்காக அனுப்பப்பட்டான். ஆகையால் அவன் கிராமத்தில் தெரிந்துகொள்ளமுடியாத விஷயத்தை அங்கு தெரிந்துகொள்ளட்டும் என்று அவனுடைய பெற்றோர்கள் விரும்பினார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி புது விஷயத்தை அவன் கற்றுக்கொண்டது அவனுடைய குற்றமாகாது. கெடுதல்கள் நிறைந்த தற்காலப் படிப்பில் ஒருவன் ஒரு பாதியைக் கற்றுக்கொண்டு மற்றொரு பாதியை கற்றுக்கொள்ளமலிருக்க முடியாது. ஒரு மாணவனிடம் ஒரு குமாஸ்தாவாகவோ, ஒரு நியாயவாதியாகவோ, டாக்டராகவோ இருக்கவேண்டியதற்கு அவசியமான கல்வியை மட்டும் கற்றுக்கொண்டு மற்றதை ஒழுங்கீனமானது என்று வெறுத்துத் தள்ளிவிடு என்று சொல்லமுடியாது. என்ன இருந்தபோதிலும் ஒரு நகரம் கிராமத்தை விட முற்றிலும் மாறுனது. இது நன்மைக்காகவும் இருக்கலாம் தீமைக்காகவும் இருக்கலாம். மேல்ப் படிப்பு கற்கும் இந்திய மாணவர்களின் மனோநிலை நீர்த்தாரையைப் போன்றிருக்கிறது. கர்நாடக ஒழுக்கக் கொள்கை சமூகக் கோட்பாடு இவற்றில் அவர்களுக்கு நம்பிக்கை குறைகிறது. ஆனல் அவற்றை முற்றிலும் புறக்கணிப்ப

தில்லே. ஆண் பெண் இருபாலர் மனதிலும் இந்த நவீன கல்விமுறை விசித்திரமான எண்ணங்களைத் தோற்று வித்து அவர்கள் மனதை கொந்தளிக்கச் செய்துவிடு கிறது ஒரு இளைஞன் இந்த நவீன புரட்சி உணர்ச்சி யால் பாதிக்கப்படாமலிருக்க முடியாது. அவன் முற்றி லும் எதிர்க்கட்சியில் சேராமலிருக்கலாம்; ஆனல் அவன் மனதில் பழைய கொள்கைகளில் நம்பிக்கைக் குறைவ தைத் தடுக்க எவராலும் முடியாது. நகரத்துக்கு வெகு தூரத்திலுள்ள கிராமத்தில் புதிய கொள்கைகளை கொஞ் சமும் தெரியாத தேக்கத் தண்ணீரில் வசித்துவிட்டுப் புதிதாக நகரத்திற்குத் திடீரென்று வந்து அங்குள்ள ஓரளவு சுயேச்சையையும், ஆரபபப் புரட்சியையும் புதி தாகப் பார்த்தவர்களுக்கு உணர்ச்சியும் கொள்கையும் மாறுபாடடைவது மிகவும் இயற்கையானது. இந்தத் துக்கக் கதையின் தலைவன் இது மாதிரியான ஒரு இளை ஞன் நகரத்தில், அவன் கிராமத்தில் பார்க்கமுடியாத விஷயங்களைப் பார்த்தான். நவீன சினிமாக்களைப் பார்த் தான். காம வெறியூட்டும் ஆங்கிலக் கதைகளைப் படித் தான். இடை இடையே சமூக சீர்திருத்த விஷயங்களை யும் ஆராய்ந்தான். தன்முன் கேட்காத குரல்கள் அவன் காதுகளை எட்டின அவன் பார்த்த விசித்திரமான பொருள்களினலும், கேட்ட புரட்சியான குரல்களின லும் அவன் முற்றிலும் புதிய மனிதனுகிவிட்டான். இதில் என்ன தவறு? அவன் கிராமத்தில் கற்கமுடியாத விஷ யங்களைக் கற்கவேண்டும் என்ற காரணத்திற்குத் தானே நகரத்திற்கு அனுப்பப்பட்டான்? இரண்டு வருஷங்கள் சென்று அவன் கிராமத்திற்குத் திரும்பியபோது அவன் தற்காலக் கல்வியால் முற்றிலும் நிரப்பப்படாவிட்டாலும்

வாழ்க்கையைப்பற்றி புதுமாதிரியான கொள்கைகள் சில வற்றைக் கற்றுக்கொண்டு வந்தான்.

ஆகையால் இயற்கையாக கிராம வாழ்க்கை அவனுக்கு சுவையற்றிருந்தது. அங்கு பரபரப்பு, காதற்கதை அசைவு, புது சம்பவங்களை எதிர்பார்த்தல் முதலியவை இல்லை. புதிதாகத் தினைத்த அவனுடைய உணர்ச்சிகளைச் செலுத்துவதற்கு அங்கு அவனுக்கு இடம் கிடைக்கவில்லை, அவன் தனக்குள்ளே யோசனைசெய்ய ஆரம்பித்தான். தன்னுடைய சகோதரியின் நிலைமை, சமூகம் அவளுக்குச் செய்துவிட்ட கொடுமை, அவளது பரிதாபகரமான வாழ்க்கை இவைகளை எண்ணிப்பார்த்தான். அவனது நவீனக் கல்வியின் ஒரு பாகம் ஆண் பெண் ஆவலைப்பற்றி ஞாபகம் உள்ளவனாயிருத்தல். அது இயற்கையின் பாடமாதலால் அதை அவன் எங்கிருந்தாலும் கற்றுக்கொண்டிருப்பான் என்பது உண்மை. எனினும் பாதி நவீன கொள்கைகள் நிறைந்த நகரில் இரண்டு வருஷம் செலவழிநததால் தன்னைப் பொறுத்த வரையிலாவது மனசாக்ஷிக்கு விரோதமின்றி நடக்க அவன் தீவிரமாக திட்டம் போட்டிருந்தான். இயற்கையின் இழுப்புக்கு அவன் தடங்கலின்றி இணங்கியதைப் பற்றி அவன் வெட்கமடைந்தாலும் அடைந்திருக்கலாம். ஆனால் அவனது நவீன கல்வி இந்த ஆகர்ஷணத்தை அறியாமலிருக்க முடியவில்லை. என்பதை வருத்தத்துடன் ஒபபுக்கொள்ளும்படி செய்திருக்கலாம் அவ்னுடைய சகோதரி அவள் செய்யாத குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டிருக்கும் குரூரத்தைப்பற்றியும் அவளுடைய கடினமான வாழ்க்கையைப் பற்றியும் அவனுடைய படிப்பு அவனைத் தெரிந்துகொள்ளும்படி செய்திருக்கும்.

இந்திய சமூகம் மிகவும் கேவலமான முறையில் இரக்க மற்றது; தனது வீட்டில் தனது மகளோ, மருமகளோ இள வயதில் விதவையாயிருக்கும்போது, நடுத்தர வயதுக்கு மேற்

பட்ட தந்தை விவர்க சுகத்தை நன்ருக அனுபவித்துக் கொண்டுவருவான். தன்னுடைய விதவை மகளோ மருமக ளோ தன்னைப்போல் சதையிலும் ரத்தத்திலும் செய்யப் பட்டவள் தான் என்றும், தன்மீது பலவந்தமாகப் புகுத்திய சன்னியாசத்தை கடைப்பிடிப்பது அவளுக்கு மிகவும் கடின மானது என்றும் அவன் கிஞ்சிற்றும் உணர்வதில்லை. இந்து சமூகம் அத்தகைய குரூர நிலையில் இருக்கிறது. ஆ... பெண் இச்சையை வெளிப்படையாக ஒப்புக்கொள்வது, புராதன மாக - கேவலமாகக் கருதப்படுவதால் நாசகா... கும்பல்கள் தாங்கள் இரக்கமில்லாமல் இளம் விதவைகளுக்குச் செய்யும் கொடுமையை உணர்வதில்லை. சமூக ஆசாரம் என்ற மயக் கத்திலிருந்து ஓரளவு விழிப்படைந்த அந்த இளைஞனுக்கு தன்னுடைய சகோதரி இளம் வயதினள் என்றும் அவள் காம இன்பத்தை நாடவில்லை என்று வெளிக்குப் பாசாங்கு செய்தாலும் இளவயதினளாகிய அவள் அந்த இன்பத்தை நாடாமலிருக்க முடியாது என்பதையும் அவன் உணர்ந்தான்.

இந்த துக்ககரமான நிலைமையில் கிராமத்திய முட்டாள்க் கொள்கைகளைப் புறக்கணித்த இளைஞன் தன்னுடைய சகோ தரியின் துக்கத்திற்கு உதவிசெயய முயன்ருன். நகரங்களில் இளம் பெண்கள் அதிக சுயேச்சையாக வெளியே செல்வதை அவன் பார்த்திருக்கிருன். கிராமத்தில் பெண்கள் கலந்து கொள்ளாத அல்லது கலந்துகொள்ள முடியாத விஷயங்களி லும் நகரத்துப் பெண்கள் சிரத்தை எடுத்துக்கொள்வதை அவன் பார்த்திருக்கிருன். பழைய சமூக பழக்கங்களினுலும் துவேஷங்களினுலும் அதிகமாகக் கட்டுப்படுத்தப்படாத புது வாழ்க்கை அந்தப் பெண்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்ததை அவன் பார்த்திருக்கிருன். வீட்டுவேலையைத் தவிர வேறு சந்தோஷமான பொழுதுபோக்கில் அவளை ஈடு படுத்தி சூழ்ந்த அந்தகார வாழ்க்கையிலிருந்து அவளை விடு வித்து அவளுக்கு சந்தோஷ வாழ்க்கை அளிக்கவேண்டும்

என்று கருதினன். அவன் அவளுக்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தான்; கல்வியின் ஆரம்பத்தை அளிக்கும் போதே தற்கால மேல்படிப்பின் நன்மையைப்பற்றி அவளுக்குச்சொன்னுன். குடும்பத்தினர் இதை அன்புடன் பார்க்கவில்லை யென்பது சொல்லாமலே தெரியும். பரம்பரை வழக்கப்பிரகாரம் அந்தப்பெண் இந்த உலக விஷயம் ஒன்றிலும் சிரத்தை கொண்டிருக்கக் கூடாது. அவள் எப்பொழுதும் தன்னுடைய இறந்துபோன கணவனைப்பற்றியே தியானம் செய்துகொண்டும் உயிரோடிருக்கும் மற்ற உறவினர்களுக்குத் தொண்டு செய்துகொண்டும் இருக்கவேண்டும். இருப்பினும் ஆரம்பத்தில் அவர்கள் செய்கைகளைப்பற்றி மற்றவர்கள் அதிகமாகக் கவனம்செலுத்தவில்லை. துரதிர்ஷடம் படைத்த பெண் சிறிது ஆறுதலடையட்டும் என்ற எண்ணம்போலும். அவளுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி அவள் எதிரேயிருந்தது—அவளுடைய வினைபயனை அனுபவிப்பதற்காக. ஓரளவு கௌரவமும், இங்கிலீஷ் படிப்பும், ஆங்கில நாகரிக ஆடம்பரமும் அமையப்பெற்றிருந்த அந்த இளைஞனிடம் வயது முதிர்ந்தோர்கள் கூட மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர்.

வெகு சீக்கிரமே அவர்கள் நாகரிகத்தின் அடுத்தபடியை ஏறினர்கள். அந்தப் பெண் சகோதரனுடன் வெளியே உலாவிவர ஆரம்பித்தாள். கிராமத்தை அடுத்துள்ள வயல்களிலும், சோலைகளிலும் அவர்கள் சந்தோஷமாக உலாவலானர்கள். இது ஒரு விதவையின் மன்னிக்கமுடியாத செய்கை! சந்தோஷமாயிருப்பதா! தெய்வத்தால் அவள் வாழ்க்கைத் துக்கமும், விசனமும், விரக்தியும், தொண்டும் நிறைந்ததாக விதிக்கப்பட்டிருக்கும்போது அவள் அதை மீறுவதா? வெண்ணை நெருப்பின் அருகிலிருந்தது. அந்த இளைஞன் நகரத்தில் பார்த்த, கேட்ட, கற்ற விஷயங்களை அவளுக்குச் சொன்னுன். தன்னுடைய சிர்கெட்ட வாழ்க்கையும், இன்

னும் கட்டத்த வேண்டிய கொடூரமான நாட்களையும் நினைத்த பொழுது அவள் உள்ளம் நடுங்கியது. அந்த இளைஞனிடமிருந்து அவள் புதுமையையும், வாழ்க்கையின் அழகிய சித்திரங்களையும் அறிந்துகொண்டாள். அவள் சுயேச்சையைப் பற்றியும் இன்பகரமான வாழ்க்கையைப் பற்றியும் கனவுகண்டாள். இளமையில் வாழ்க்கையும் காதலும் ஒரே அர்த்தத்தைத் தருவன.

அவர்கள் ஒரு பெரிய நகரத்துக்குச் சேர்ந்துபோக திட்டம் போட்டார்கள் — இன்னும் அதிக பொருள்களைப் பார்க்கவும், அதிக விஷயங்களை தெரிந்துக்கொள்ளவும், கிராமத்திற்கு மாறுக சுயேச்சையாக வாழவும் விரும்பினார்கள். சகோதர சகோதரி நிலைமையை மீறிய விஷயத்தைப் பற்றி அவர்கள் நினைத்தே இல்லாமலிருக்கலாம். அல்லது அவர்கள் நினைத்திருந்தாலும் இருக்கலாம். என்ன இருந்தபோதிலும் அவர்கள் ஒருவர்மீதொருவர் காதல்கொண்டிருந்தால் அது இயற்கைக்கு முரணாகாது. அந்த இளைஞன நகரிலிருந்து திரும்பி வரும்போது தட்டியெழுப்பப்பட்ட காதல் உணர்ச்சியுடனும் அதைத் தன்னிடம் ஒப்புக்கொளவதற்கு வெட்கப்படாத நிலையிலும் வந்தான். உண்மையாக சொன்னால் சாதாரணமாக எல்லா இளைஞர்களுக்கும் காதல் உணர்ச்சியிருக்கிறது. அது இல்லையென்று பாசாங்கு செய்வது வேஷம். கிராமத்திற்குத் திரும்பி வந்ததும் அவன் தன்னை கட்டுப்பாடு செய்திருக்கலாம். அல்லது இயற்கைக்கு விரோதமாகத் தன்னுடைய அவயவங்களினால் இந்திரிய சுகத்தைப் பெறுவது முதலிய கேவல வழக்கத்தைக் கையாண்டிருக்கலாம். பிரம்மசரியத்தைக் கடைபிடிக்கும்படி செய்யும்போதனை இத்தகைய வழக்கத்தை அநேகமாக உண்டாக்குகிறது. இந்த வழக்கம் பிரம்மசரியத்தைக் கைவிடுவதைவிட மோசமானது; ஏனென்றால் அது உடற்கூறு சாஸ்திரப்படி கேடுதலானது; கலையுணர்ச்சிப்படி அருவருப்பானது. இளைஞர்களைக் கீழ்த்தர

எண்ணம் உடையவர்களாயும், கபடர்களாயும் செய்கிறது. அதிர்ஷ்டவசமாகவோ- துரதிர்ஷ்டவசமாகவோ அவனுடைய காதல் உணர்ச்சிக்கு இயற்கையான போக்கிடமாக துரதிர்ஷ்டம் வாய்ந்த அவனது சகோதரி இருந்தாள். அவளும் அதற்கு இணங்கியதாகத் தெரிகிறது. இயற்கையின் உணர்ச்சி கட்டுக்கடங்காதது.

என்றும் மாருத மனிதகுணங்கள் சிலவற்றைப்பற்றி அடிக்கடி சொல்லப்படுகிறது. உண்மையாகச் சொன்னால் காதலிக்க விரும்புவதும், காதலிக்கப்படவிரும்புவதும் தான் நிரந்தரமான ஒரே மனித குணம். இந்த குணம் பிராணிகளின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. தண்ணீரில்லாமல் தாகத்தைத் தீர்ப்பது போலவும், ஆகாரமில்லாமல் பசியை ஆற்றுவது போலவும், ஆண்-பெண் சேர்க்கையில்லாமல் காதலைப் பூர்த்திசெய்ய முடியாது. ஆனால் காதல் என்பது ஆண் பெண் சேர்க்கையை மட்டும் குறிப்பதல்ல. முக்கியமாக காதல் என்று சொல்வது ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனை உற்பத்தி செய்ய விரும்பும் வேட்கையே தவிர வேறு ஒன்றும் இல்லை. இது உயர்ந்ததாகவும், விசித்திரமாகவும் உள்ள ஒரு குணமாகக் கற்பிக்கப்படுகிறது. காதல் உணர்ச்சி எவ்வளவு உயர்ந்ததாகவோ சிறந்ததாகவோ இருந்த போதிலும் கடைசி ஆராய்ச்சியில் தேக சம்பந்தமான ஒரு வேட்கையே என்று தெரியவரும். சந்தர்ப்பங்களின் உதவிக் கிடைக்கும்போது மனோதத்துவ கட்டுப்பாடும் சமூகஒழுக்கத் திட்டமும் மறைந்து காதல் கபடவேஷத்தைப் போக்குகிறது. தாம் காதல் வசப்படவில்லை யென்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்பவர்களும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது இதில் வீழ்கின்றனர்.

ஒரு யௌவனப் பெண் ஒரு யௌவன ஆணைக் காதல் சக்தியால் இழுப்பதும் இழுக்கப்படுவதும் இயற்கை. ஆண்

பெண்ணைப் பிரித்து வைப்பதால் இதை ஒருவாறு தடுக்கலாம்; ஆனால் இது உண்மையான கற்புநிலையாகாது. இவ்வாறு காக்கப்படும் கற்புநிலை போலியானது. இன்னும் சொல்லப்போனால் பிரித்துவைப்பது எந்தக் கெடுதல்களைத் தடுக்க பிரம்மசரியத்தை அனுஷ்டிக்கச் சொல்லப்படுகிறதோ அந்தக் கெடுதல்களை அதிக சுலபமாக உண்டாக்குகிறது. அது முறை தவறிய கலப்பையும் சில சமயம் சகோதர சகோதரிகளின் கலப்பையும் உண்டாக்குகிறது. பெண்களின் இஷ்டமில்லாமலேயே அவர்களைப் பலவந்தமாகக் கைம்பெண்ணாக இருக்க சமூகம் பலவந்தப்படுத்துவதால் சகோதர சகோதரி கலப்பு உண்டாவதற்கு அதிக ஏதுவாகிறது. இதை நான் உத்தேசமாகச் சொல்லவில்லை; உண்மையாக நடப்பதே. தைரியமிருந்தால் அவலக்ஷணமான உண்மைப் பாருங்கள். எலும்புக்கூட்டை போர்த்தியிருக்கும் வெளி வேஷத்தை விலக்கிப்பார்த்தால் நான் சொல்வது உண்மை என விளங்கும். படித்தவர்களும், கலைஞர்களுமான பெரிய மனிதர்கள் பலர் என்னிடம் தாங்கள் இவ்வாறு செய்ததாக ஒப்புக்கொண்டதைக் கேட்டிருக்கிறேன். இவ்வாறு செய்வதால் குடும்ப ரகசியம் வெளியே தெரியாமலிருக்கிறது என்று அவர்கள் சொல்லி இதற்கு சமாதானமும் சொல்கிறார்கள். சாதாரணமாகக் கருதுவது போல் சகோதர சகோதரி கலப்பு இயற்கைக்கு விரோதமானதல்ல. கயாவில் இருக்கும் அர்ச்சகர்கள் இந்த வழக்கத்தையே கொண்டிருக்கிறார்கள். இயற்கையாகவே சகோதர சகோதரிகள் காதலிப்பது சகஜம். சர். ஜேம்ஸ் ஜி பிரேசர் என்ற மனிதப் பிராணி நூல் வல்லுனர் சகோதர சகோதரிகளுக்குள் காதல் உண்டாவது இயற்கை என்றும், அதனாலேயே இதைத் தடுப்பதற்

காக அதிக தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதுகிறார். காதல் என்பது இயற்கையின் விதியாயிருப்பதால் பழங்காலத்து மனிதர்களின் வழக்கத்தினாலோ தற்கால மனிதர்களின் வைதீகக் கொள்கைகளினாலோ ஒருவரோடொருவர் அதிகமாகப் பழகும் சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் காதலிக்காமலிருக்கமுடியாது. இங்கு சொன்ன சோகக் கதைக்கும் மூல காரணம் இதுதான்.

அந்த இளைஞன் அந்த சந்தர்ப்பத்தில் செய்யக் கூடிய ஒரே கௌரவமான செய்கையைச் செய்ததற்காகத் தூக்குமேடைக்குச் சென்றான். தான் சகோதரியாகவோ காதலியாகவோ நேசித்த பெண், இரக்கமற்ற இந்த உலகில் மிகுந்த பாவியாக கருதப்பட்டு இழிவு படுத்தப்படுவதை அவன் தடுக்க அந்த சந்தர்ப்பத்தில் செய்யக்கூடியதைச் செய்தான். ஆடம்பரமான பக்தி மார்க்கம் ஒழுக்கம் இவற்றைப் புகட்டும் சமூகத் திட்டங்களினால் எத்தகைய ஒழுங்கீனம் நடக்க ஏதுவாகிறது! துரதிர்ஷ்டம் வாய்ந்த அந்தப்பெண் அந்த கிராமத்தில் வசிக்க முடியாது. அவளுடைய தாய் தந்தையர் அவளை வீட்டைவிட்டு விரட்டுவார்கள்; அவளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று விரும்பியபோதிலும் சமூகக் கொடுமைக்குப்பயப்படுவார்கள். அவள் திருந்துவதற்காக ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது. தன் மேல் சுமத்தப்பட்ட ஒழுக்க மார்க்கத்திலிருந்து தவறிய அல்லது தவறியதாகச் சந்தேகிக்கப்பட்ட விதவை கடுமையான சமூக விதிகளிலிருந்து இரக்கத்தையே எதிர்பார்க்க முடியாது. தண்டிக்கப்படுவது ஒழுக்கம் தவறியதற்காகக்கூட அல்ல, ஆனால் ஏற்படுத்தப்பட்ட சமூக விதிகளை மீறியதற்காகத்

தான். சமூக விதியைப்பற்றி போதுமான அளவு பயப்படாததுகூட மன்னிக்கமுடியாத ஒருகுற்றமாகும். அந்தத் துரதிர்ஷ்டம்பிடித்தபெண் அந்தகிராமத்தில் அதற்கு மேல் இருக்கமுடியாது அவள் வேறு எங்கு போகமுடியும்? அவள் எப்படி ஜீவனம் செய்வது? ஆசாரம் என்ற பெயரால் கபட நாடகத்தை நடத்தும் சமூகத்தைப் பாதுகாப்பவர்கள் இந்தக் கேள்விகளைப்பற்றிக் கவலைப்படுவதேயில்லை. சமூகத்தின் ஆசாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்தால் ஜீவனத்துக்கு அவசியமான மிகக் குறைந்த பொருள்கள் அவளுக்குக்கிடைக்கும். அவள் தன் உடலை விற்றால் அவளுக்கு யௌவனம் இருக்கும் வரையில் ஆடம்பரமாகக்கூட ஜீவனம் நடத்தலாம் மத ஆசாரத்தை உயர்ந்ததாகக் கருதும் சமூகத்தில் ஒரு பெண் தன்னை விவாகத்தின் மூலமாக ஒருவனுக்கு விற்றோ அல்லது தாசித்தொழிலின் மூலமாக விற்றோதான் ஜீவனம் செய்யமுடியும். யௌவன உணர்ச்சியின் வசப்பட்டு சமூகச் சட்டத்தை மறந்த ஒரு பெண்ணைத் துன்புறுத்துவதோ அல்லது தற்கொலை செய்துகொள்ளும்படிச் செய்வதோ நியாயமா?

அந்த இளைஞன் இது நியாயமல்ல என்று உறுதியாக நம்பினன். சமூகத்தின் இரக்கமற்ற கொடுமைகளிலிருந்து காப்பாற்றவே அவன் அந்தப் பெண்ணைக் கொலைசெய்தான். அதற்காக சமூகமும், அச்சமூகத்துக்குத் துணைபுரிய இயற்றப்பட்ட சட்டமும், அவனைத் தூக்கில் போட்டது.

II

அடுத்த கேசும் இத்தகைய குற்றத்தினால் ஏற்படும் சம்பவத்தைப் பற்றியது. முன் சொல்லிய கதையைப் போல் அந்த சந்தர்ப்பத்தில் கொலை செய்யப்படாவிட்டாலும் கொஞ்ச காலங்கடந்து வேறு சந்தர்ப்பத்தில் வேறு விதமாகக் கொலைசெய்யப்படுகிறது. இதுவும் சமூகத் திட்டத்தின் சோகக் கதையே ஆகும். தூக்குக் கயிற்றின் சுருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் போடப்படாவிட்டாலும் பிறகு போடப்படுகிறது. சோகக் கதையின் முடிவு கொலையே; ஆனால் இந்தக் கொலை வேறு ஆசாமியால் நடக்கிறது.

இந்தக் கேசில் ஒரு இளம் விதவை தண்டிக்கப்பட்டாள்; அவள் பிரசவத்தின்போது தன் குழந்தையை கழுத்தை நெறித்து கொலை செய்ததற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டாள்; மரண தண்டனை விதிக்கப்படவில்லை. இந்தக் கொடூரமான செய்கையை அவள் அதிக பயத்தினால் தன் சுய நினைவு இல்லாமலே செய்திருப்பாள் என்பது வெளிப்படை. ஆகவே சட்டப்படி தண்டனையை அளித்த நீதிபதி அவளுக்கு இரக்கம் காட்ட வேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு எழுதியிருந்தார். அது கிடைத்ததா என்பது தெரியாது.

அவள் ஒரு சாதாரண குடியானப்பெண். தன் கணவன் இறந்த பிறகு சாதாரண வழக்கம்போல் அவள் தனது கணவனுடைய உறவினருடன் வசித்துவந்தாள். இளம் விதவைகளுக்குத் தனது கணவனின் உறவினரு

டன் அவன் இறந்த பிறகு சம்பந்தம் கிடையாது. அவர்கள் அன்னியர்களாக மாறி அவளைச் சுமையை இழுக்கும் மாட்டைப்போல் நடத்துவார்கள். கெட்ட சகுனமாகவும், துரதிர்ஷ்டத்தின் சின்னமாகவும் அவள் கருதப்படுவாள். அவள் இரக்கமில்லாமல் நடத்தப்படுவாள். செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் மட்டும் தான் தங்கள் கணவன் இறந்த பிறகு தங்கள் தாய் தந்தையரிடம் சென்று ஓரளவு சந்தோஷமாக வாழ முடியும். காரணமில்லாத காரியத்தினால் இளம் பெண்கள் தங்கள் கணவன்களுடைய மரணத்திற்கும், அதனால் குடும்பத்திற்கு ஏற்படும் நஷ்டத்திற்கும் மூலகாரணமாகக் கருதப்படுகிறார்கள். பிரிவினை யாகாத குடும்பங்களில் அந்தக் குடும்பத்திலுள்ள வேலைசெய்யும் ஆற்றல் உள்ள ஒரு மனிதனின் மரணத்தால் குடும்பத்தின் செல்வ நிலைக்கு நஷ்டம் ஏற்படுவது இயற்கையே. பெண்ணின் தலைவிதி விதவையாகும்படி எழுதப்பட்டிருப்பதால் அவள் தான் அவளுடைய புருஷனின் இறப்புக்கு காரணமாகக் கருதப்படுகிறாள். ஆனால் மணமாவதற்கு முன் அப்பெண்ணின் கருத்தையோ, விருப்பத்தையோ அறிந்து கொண்டுதான் அவளை மணப்பெண்ணாகச் செய்கிறார்களா என்றால் அது இல்லை. ஆகவே அவளுடைய கணவன் மரணத்திற்கு அவள் எப்படிக் காரணமாவாள் என்பதை எவரும் சிந்திப்பதில்லை. கணவன் இறந்தவுடன் திக்கற்ற அந்தப் பெண்மணியின் பாபத்தினாலும், விதியினாலும், துரதிர்ஷ்டத்தினாலும்தான் அவள் கணவன் இறந்ததாகக் கருதுகிறார்கள். விதவையாகும் விதி படைத்த ஒரு பெண்ணை மணக்காத ஒரு இளைஞன் இறக்க மாட்டானென்பது நம்பிக்கை. நியாயமாகச் சொல்லப்போனால் இந்த நம்பிக்கை உண்மையாயிருந்

தால் சீக்கிரம் இறக்கவேண்டியது ஒரு இளைஞனின் விதியென்றும், அவனை மணந்த பெண் அதனால் அகாரணமாகக் கஷ்டப்படுகிறாள் என்பதும் உண்மையாகும். ஆனால் சமூகம் இப்படி நினைக்காமல் குற்றத்தை விதவையின் மீதே சுமத்தி அவளைத் தண்டிக்கிறது. சில சமயங்களில் விதவைகள் தங்கள் கணவன்களை வேண்டுமென்றே கொலைசெய்தவர்களைப் போல் கூட நடத்தப்படுகிறார்கள். துரதிர்ஷ்டம் வாய்ந்த கணவன்களை விழுங்கிய சூனியக்காரிகளாகவும், பிசாசுகளாகவும் அவர்கள் அநேக சமயம் சொல்லப்படுகிறார்கள்.

கூலிவேலை செய்யும் குடும்பங்களில் ஆண்களையும் பெண்களையும் பிரித்துவைக்கமுடியாது. ஜாதி ஆசாரப்படி கோஷா முறை இருந்தபோதிலும் இது பெயரளவிலேதான். பணக்காரக் குடும்பங்களைப்போல் ஏழைக் குடும்பங்களில் கற்புநிலையைப் பற்றிய வெளி ஆசாரங்களை அதிகமாகக் கவனிப்பதில்லை. ஒரு சொத்து ஒரு மனிதனுக்குச்சொந்தமானது; அதைப் பிறன் ஒருவன் எடுத்துக்கொண்டால் பொறாமை உண்டாகிறது. கீழ் நிலையிலுள்ள குடும்பங்களில் கற்பு நிலையும் இதுமாதிரியே. மனைவி அவள் புருஷனுக்குச் சொந்தமானவள். சமூக ஒழுக்க விதிப்படி மற்றவர்கள் அவனுக்குச் சொந்தமான மனைவியை தொடக்கூடாது; அவனும் மற்றவர்களுடைய மனைவியை தொடக்கூடாது. ஒருவனுடைய உரிமையில் மற்றொருவன் தலையிட்டால் பொறாமை உண்டாகிறது. ஒருவனுடைய உடமையை மற்றொருவன் ஆக்கிரமித்தால் கோபம் உண்டாவது நியாயம். ஒரு பெண் எந்த ஆடவனை மணந்துகொண்டாளோ அவனுக்கு அடிமையாய் இருக்க வேண்டும். "கற்பு நிலையைப்பற்றி இப்படி அநாகரிகக் கொள்கை கொண்டுள்ள கீழ்த்தர வாழ்க்கை நடத்தும் சமூகத்தில் ஆண் பெண்கள் கலந்து பேசுவதைத்தடுக்காதபோது விபசாரம் நடப்பது இயற்கை. கூலி வேலை செய்யும சமூகத்தில் கற்பைப் பற்றிய கொள்கை இருந்தபோதிலும்

அதை உயர்ந்ததாகவும், சிறந்ததாகவும் சொல்லும் கபட நாடகப்பிரசாரம் இல்லை. ஒழுக்கத்திற்குப் படிப்பும், கலையும், நாகரீகமும் ருசியை உண்டாக்கும்படிச் செய்யும் உரைப்புப் பொருள்கள். இவை கீழ் நிலையிலுள்ள சமூகத்தில் இல்லை.

இந்தப் பெண் இருந்த சமூகநிலை இத்தகையது. தனது கணவனுடைய உறவினர்களுக்கு மாடுபோல் உழைத்துப் பிரயோசனமாயிருந்த வரையிலும் அவள் பெண் என்ற முறையில் கற்பைக் காத்துவந்தாளா என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. கணவனின் சகோதரர்கள் அவளுடன் கூடாநட்புக் கொள்வது தவறு என்று சமூகம் கருதுவதால் அவள் வேலை செய்வதற்காக மட்டும் தனது கணவன் குடும்பத்தில் இருக்கிறாள். இன்னும் உண்மையாகச் சொல்லப் போனால் புருஷன் உயிரோடிருக்கும்போதுகூட மனைவி வேலை செய்யும் மாடாகவே முக்கியமாகக் கருதப்படுகிறாள்; புருஷன் மனைவி கூடுதல் முக்கியமற்ற சம்பவமாகக் கருதப்படுகிறது. ஆகவே இந்தக் கதையில் வரும் பெண் தனது காமவேட்கையைத் தீர்த்துக்கொள்வதற்கு கட்டுப்பாடு அதிகமில்லாமல் இருந்தாள்.

உயர்தர வாழ்க்கை நடத்தும் வகுப்பாரில் கற்புநிலையைப் பற்றி உயர்ந்த கருத்துகளும், மனோ நிலையும் இருக்கின்றன. கீழ்நிலை வகுப்புக்களில் இது குறைவு. வெளியே இஷ்டப்படி செல்வது முதலியவற்றிற்கும் தடை அதிகம் இராததால் அவர்கள் தந்திரமாகக் கெட்ட எண்ணத்துடன் போவது சுலபம். கணவனின் உறவினர்களுக்கு இத்தகைய இளம் விதவைகள் அதிக வருவாயைக் கொடுக்கும வேலையாட்கள்; அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் சாப்பாடு மட்டுந்தான். கணவனின் உறவினர்கள் அவளுடைய வேலையை மட்டும தான் சிரத்தையுடன் கவனிப்பவர்களாதலால் வேலை செய்யாத சமயங்களில் அவள் தவறி விபசாரம் செய்தாலும் அதிகமாகப் பொருட்படுத்தமாட்டார்கள்; அதற்காக அவளைத்

துரத்திவிட்டால் மிகவும் உபயோகமான ஒரு வேலையாள் குறைவு. தோட்டத்திலுள்ள ஒரு குடிசையில் அவள் திருட்டுத்தனமாக ஒரு ஆடவனைத் தனியாகச் சந்தித்தாள் என்பதற்காக அவளைத் துரத்திவிடமாட்டார்கள். இந்தக் கதையில் வரும் பெண்ணுக்கு அவளுடைய கணவனின் உறவினர் இஷ்டப்பட்டோ இஷ்டப்படாமலோ இத்தகைய யதேச்சையை கொடுத்திருந்தார்கள்.

சில நாட்களுக்குப் பின் அவள் கர்ப்பவதியானாள். இது தெரிந்த பிறகுகூட அவளுடைய உறவினர்களால் ஒழுக்க நிலைக்காக துரத்தப்படவில்லை. அவளைத் துரத்திவிட்டால் நன்றாக வேலைசெய்யும் ஒரு ஆசாமியை இழந்துவிடுவோமே என்று கருதி அவர்கள் அறியாதவர்கள் போலிருந்தார்கள். விஷயம் முற்றியதும் குழந்தை பிறக்கும் வரையில் மறைவாக இருந்து, பிறந்ததும் அதைக் கழுத்தை நெறித்துக்கொன்று புதைத்துவிடும்படி அவளுக்குக் கட்டளையிட்டார்கள். இந்த உத்தரவை மீறினால் விநோதமான இந்த உலகத்தில் அவளுக்கு ஆதரவளித்த ஒரே ஒரு வீட்டிலிருந்தும் அவள் துரத்தப்படுவாள். சமூகத்தின் கல்நெஞ்சர்களால் அவமானப்படுத்தப்படுவாள்; இன்னும் எண்ணமுடியாத துன்பங்களெல்லாம் அவளை வந்து சூழ்ந்துகொள்ளும். உதவியற்ற பெண் இந்த இரண்டு சங்கடங்களில் எதை விரும்பினாள் என்பது நமக்குத்தெரியாது. இருப்பினும் இரண்டில் ஒன்றை அவள் செய்யவேண்டும். இதிலிருந்து தப்ப மார்க்கமில்லை. அவளுடைய கள்ளக் காதலன் இதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பது தெரிந்த விஷயம். மேலும் அவளுக்கு அவன்மீது பாத்தியதை இல்லை. அவள் குழந்தையைக் கொல்வதே மேல் என்று கருதினாள்; குற்றத்தை மறைப்பதில் தோல்வியடைந்தாள். கொடிய குற்றத்தைச் செய்ததாக விசாரிக்கப்பட்டாள், குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டாள். இச்சோகக்

க்கை முழுவதும் சமூக அகராதியின்படி நியாயமாக இல்லா விட்டாலும் அவளுடைய நிலைமையில் அவள் தவறு மன்னிக் கக்கூடியதே. நீதியும் ஒழுக்கமும் இந்த உதவியற்ற பெண் மீது இரக்கம் காட்டவில்லை; ஒழுக்கமற்ற, நியாயமற்ற, குரூர மான முட்டாள்த்தனமான சமூகத்தினால் அவள் இந்தக் குற் றத்தைச் செய்தாள் என்று வக்கிரபுத்தியுள்ள நீதியின் மனப் பான்மை தீர்மானிக்கவில்லை. சமூக நிலையின் உதவியற்ற, நம்பிக்கையற்ற, அடிமை — கட்டாயத்தின் மீது இந்த குற் றத்தைச் செய்தாள் என்பதை இரக்கமில்லாமல் நீதிசெலுத் தும் நீதிபதி கூட உணர்ந்து இரக்கப்பட்டார்.

விசாரணையின்போது தன்னுடைய வாக்குமூலத்தில் அந்தப்பெண் தன்னுடைய குழந்தையைத் தன்நன்மைக் காகக் கொல்லவில்லை என்றும் பிற்காலத்தில் அது பசியால் இறக்காமலிருப்பதற்கே கொன்றதாகவும் சொன்னாள். வெறுப்புடன் அவள் குழந்தையைக் கொன்றிருக்காவிட்டால் அவள் கொடூரமான உலகில் பிச்சை யெடுத்து வயிறு வளர்க்கும்படி துரத்தப்பட் டிருப்பாள். இரக்கமுள்ள மனிதர்கள்கூட இத்தகைய குற்றவாளிக்குப் பிச்சையளிக்கமாட்டார்கள். தாயாரின் பாசத்தை அதைரியம் வென்றது. தப்ப முடியாமல் அகப்பட்டுக் கொண்ட தாயின் வாஞ்சை தற்கொலை செய்து கொண்டது. என்ன இருந்தபோதிலும் இந்த "குற்றவாளி" அந்தக் குற்றத்துக்குப் பொறுப்பாளி யல்ல. இதன் பொறுப்பை ஒரு தனி மனிதன் மீதோ, சில தனிப்பட்டவர்கள் மீதோ சுமத்த முடியாது. எல் லாக் குற்றங்களுக்கும் இருப்பதுபோல் இந்த குற்றத் துக்கும் பொறுப்பு சமூகம் முழுவதையும் சார்ந்தது தான்.

III

பத்திரிக்கையில் இதே சமயத்தில் வெளி வந்துள்ள ஒரு செய்தி ஒழுக்கத்தில் உயர்ந்தவராகக் கருதப்படும் மேல் வகுப்பினராலும் இத்தகைய குற்றங்கள் செய்யப் படுகின்றன என்றும் ஆனல் அவர்கள் தங்கள் செல்வ, கௌரவ, உயர்வு நிலையின் காரணமாக இத்தகைய குற்றங்கள் வெளிவராமல் அமுக்கி மறைத்துத் தண் டனையிலிருந்தும் தப்புகிறார்கள் என்பதை நிரூபிக்கும். ஒரு ரயில்வே பாலத்தின் அடியில் நதியில் நல்ல துணி யால் போர்த்தப்பட்ட அடிபட்ட புதிதாகப் பிறந்த ஒரு சிசுவின் பிரேதம் காணப்பட்டது. முதல் நாளிரவு ரயில் வண்டியிலிருந்து ஒருவர் இதை எறிந்திருக்க வேண்டும். யார் இதைச் செய்திருப்பார்கள்? மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்யும் ஒருவர் இதை நிச்சய மாகச் செய்திருக்கமுடியாது. ஏனெனில் மூன்ரும் வகுப்பு வண்டியில் ஒருவர் தனியாக இருக்கமுடியாது ஆகையால் அவர் இதைச் செய்திருந்தால் உடனே கண்டுபிடிக்கப்பட்டிருப்பார். கண்டுபிடிக்க முடியாமல் இந்த குற்றத்தை ஒழுங்காகச் செய்வதற்கு அவர் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்திருக்கவேண்டும். அல்லது முதல் வகுப்பில் பிரயாணம் செய்திருக்கலாம். அப்படி பிரயாணம் செய்த போதிலும், அவர் தனியா யிருக்கமுடியாது என்ற பயத்திற்காக கம்பார்ட்மெண்டை ரிசர்வு செய்திருக்கவேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனல் இந்தக் குற்றத்தைச் செய்தவர் பணக்காரர் என்று தெளிவாகத் தெரிகிறது.

அந்த உயிரற்ற உடல் கொலை செய்யப்பட்ட ஒரு குழந்தையினுடையது என்பதில் கொஞ்சமும் சந்தேகம்

110753

இருக்கமுடியாது. சந்தர்ப்பச் சாட்சியங்கள் அதை நிரூபித்தன. துணி உயர்ந்ததாயிருந்ததால் அந்தக் குழந்தை கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்ததல்ல என்பதை ஊகித்துணர முடியும். அந்தக் குழந்தை இயற்கையாக இறந்திருந்தால் மேல்தர வகுப்பினர் அதை அவ்வாறு இரவில் ஓடும் ரயிலிலிருந்து நதியில் தூக்கி எறிந்திருக்க மாட்டார்கள். அதற்கு மாறாக அது மதாசாரப்படி அடக்கம் செய்யப்பட்டிருக்கும். குழந்தையின் உடம்பை அறுத்து டாக்டர்களால் பரீக்ஷை செய்யப்பட்டால் அது கொலை செய்யப்பட்டது என்பதற்கு நேரடியான சாட்சியம் கிடைக்கும். வெளி காயங்கள், வீக்கம் முதலியவற்றைக் கவனித்துப் பார்த்தால் கூட அது கொலை செய்யப்பட்டது என்பது தெரியும். வேண்டாத—புதிதாகப் பிறந்த குழந்தைகள் சாதாரணமாகக் கழுத்தை நெறித்துக் கொலை செய்யப்படுகின்றன. இதற்கு சந்தேகிக்க முடியாத அடையாளம் உடம்பில் தெரியும்.

அந்தக் குழந்தை விபசாரத்தால் பிறந்தது என்பது தெளிவாகத் தெரியும். அப்படியில்லாவிட்டால் அது அவ்வாறு தூக்கி எறியப்பட்டிருக்காது. ஒரு விவாகம் ஆகாத பெண்ணோ அல்லது விதவையோ சமூக நீதியை மீறி விபசாரக் குற்றத்தைச் செய்து சட்டநீதியை மீறிக் கொலையும் செய்திருக்கவேண்டும். அநேகமாக இந்தக் கேசில் குழந்தையின் தாயார் தான் கொலையைச் செய்திருக்கவேண்டும். ஆகையால் இதற்கு முன்னைய கதைகளில் இருந்ததுபோல் வெளிக்கட்டாயம் ஒன்றும் அவளுக்கு இருந்திராது. வேண்டுமென்று முழு மனதுடன் செய்த குற்றம் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டி

யது. இதில் கட்டாயம் ஒன்றுமில்லை. கொலையின் நோக்கம் திருட்டுத்தனமாக விபசாரம் செய்த பெண் முட்டாள்த்தனமான சமூகத் திட்டத்தை எதிர்க்கப் போதுமான தைரியம் இல்லாதிருந்ததுதான்; வேறு பெண்கள் இந்த குற்றத்தைச் செய்தபோது அந்த இதே பெண் ஒழுக்கத்தவறு என்று குறைகூறி இகழ்ந் திருப்பாள். இது கேவலமான நோக்கம். இருப்பினும் இந்த குற்றத்தைச் செய்தவர் பணக்காரராயும், தன் னுடைய ஒழுக்கத் தவறுதலையும், கொலைக் குற்றத்தை யும் மறைக்கக் கூடிய செல்வாக்குடையவராகவும் இருப்பதால் அவமானத்தினின்றும், தண்டனையிலிருந் தும் தப்புகிறார். ஏராளமாகவும், தெளிவாகவும் இருந்த குறிப்புகளைப் பின்பற்றியிருந்தால் போலீசார் சுலப மாக இந்தக் குற்றவாளியைக் கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் மறைவாயிருந்த ஒரு கை அவர்களுடைய துப்புத் துலக்கும் வேலையை நிறுத்தியது. குற்றச் சட்டத்தின் பயங்கரப் பற்கள் ஏழைகள் மீது இரக்கமில்லாமல் பாயும்; ஆனால் பணக்காரர்களாயிருந்தால் அவர்களை ஒன்றும் செய்யாமலிருக்கும். சமூகத்தின் தீர்ப்பும் ஏழைகள் மீதும், உதவியற்றவர் மீதும் குரூரமாயும், இரக்கமற்றும் இருக்கும்; ஆனால் மேல் வகுப்புக் குற்ற வாளிகளிடம இரக்கமும், மன்னிப்பும் காண்பிப்பதோடு சில சமயம் கண்டும் காணாததுபோலவும் இருக்கும்.

IV

இந்தக் கேசில் அறுபது வயதுக்கு மேற்பட்ட ஒரு கிழ வன் தன்னுடைய இளம் மனைவியைக் கொலைசெய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டான். அப்பீலில் மரண தண்

டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. வயது சென்ற கிழவன் என்பதற்காகத் தண்டனை குறைக்கப்பட்டிருக்கலாம். இந்த மாறுதலை அவன் விரும்பினனு, வெறுத்தானு என்பது எனக்கு வியப்பு. ஆயுள் தண்டனை என்ருல் குறைந்தது பத்து வருஷமாவது சிறையிலிருக்க வேண்டும். ஆகையால் அறுபது வயதுக்கு மேற்பட்ட அவன் உயிருடன் வெளியே திரும்புவதற்கு ஏதுஇல்லை. ஆயுள் தண்டனையாகப் பல வருஷங்கள் சிறையில் கஷ்டப்படுவதைவிட உடனே தூக்குத் தண்டனையை அடைவது சுலபமானது. ஆயினும்நான்பார்த்த கொலைக்குற்றவாளிகளில் ஒருவராவது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற விரும்பாமலில்லை. இது ஒரு விந்தை.

ஒரு கைதியின் ஆயுள் அடமானம் வைத்த பொருள். அவன் இஷ்டம்போல் தற்கொலை செய்து அதை முடிவுசெய்ய முடியாது. சட்டத்தை ஒருவன் ஏமாற்றலாமா? நீதி ஒரு பழிவாங்கும் தேவதை. சொத்து சம்பந்தமான குற்றங்கள் கிரிமினல் சட்டப்பிரகாரம் மிகக்கொடியது. சொத்துரிமையைக் காப்பாற்றவே கிரிமினல் சட்டம் ஏற்பட்டது. குற்றச் சட்டம் ஒருவனைத் திருத்துவதற்காக ஏற்படவில்லை. ஆனல் துன்புறுத்துவதற்காக ஏற்பட்டது. ஒருவன் மற்றவனுடைய சொத்துரிமையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிட்டால் தண்டிக்கப்படுகிருன். ஆனல் அத் தண்டனையினுல் அவன் அதே உரிமையை இழக்கிருன். ஆகையால் இது தர்க்கரீதியாக நியாயமற்றது அல்லவா? மற்றவர்களிடமிருந்து ஆக்கிரமித்த சொத்தை மாத்திரம் அவனிடமிருந்து பிடுங்கிவிட்டால் அது நியாயமானதுதான். அது மத்திய காலத்திய நியாயம். ஆனுல் பாவம்தான் நியாயம் என்ற கொள்கையின் பிரகாரமாவது சரியானதாயிருக்கும். நாகரீக சட்டங்களில் நீதி என்ற பெயரால் கபடமும் வேஷமும் இருந்தாலும் அநுபவந்தான் நியாயம் என்பதையே அடிப்

படையாகக் கொண்டுள்ளது. இயற்கையால் அளிக்கப்பட்டதும் ஒருவனுக்கு பிறப்புரிமையானதுமான உயிரின்மீது ஒருவனுக்கிருக்கும் உரிமையில் தலையிடுவது கிரிமினல் சட்டத்தின் மூலதத்துவக் கொள்கைக்கே விரோதமானது. என்னுடைய உயிர் எனக்குச்சொந்தமானது. தங்களால் உண்டாக்கப்பட்டது என்பதற்காக என்னுடைய பெற்றோர் வேண்டுமானால் அதில் உரிமை கொண்டாடலாம். ஆனால் சிருஷ்டி யென்பது இயற்கையால் உண்டாக்கப்படுவதால் அவர்களும் உபகாரணமாகவே இருந்தார்கள். ஆகையால் கிரிமினல் சட்ட நியாயத்தின் பிரகாரம் ஒருவனுடைய உயிர் மற்றவர் அதில் தலையிடக்கூடாத ஏகபோக உரிமை உடையது. அதைப்பொறுத்த வரையில் அவனுடைய உரிமை மறுக்கப்படக் கூடாததாயிருக்க வேண்டும். ஆனால் ஒரு கைதியின் தண்டனை எதுவாயிருந்தபோதிலும் இந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. தர்க்கமும், நியாயமும் ஒரு கைதி சிறைத்தண்டனையை அனுபவிக்காமல் இஷ்டப்பட்டால் தற்கொலை செய்துகொள்ள உரிமையுடையவனாய் இருக்க வேண்டுமென்று கூறுகிறது. இந்த பாத்தியதையைத் தாராளமாகக் கொடுக்கலாம். ஏனென்றால் மிகச் சிலரே தற்கொலை செய்துகொள்வதே மேல் என்று கருதுவார்கள். மரண பயம்தான் மனிதனை அடிமையாயிருக்கும்படி செய்கிறது.

தனது மனைவியைக் கொலைசெய்த கிழவனைப்பற்றி மேல் கொண்டு தொடர்கிறேன். அவன் இந்தப்பெண்ணை மூன்றாவது தாரமாகவோ, நான்காவது தாரமாகவோ விவாகம் செய்துகொண்டபோது அவனுக்கு வயது அறுபது நிரம்பவில்லை. ஆகையால் அவன் மணம் செய்துகொண்டது சமூகக் கோட்பாட்டின்படி முற்றிலும் தவறாகாது. ஆனால் அவன் ஒரு விஷயத்தை கவனிக்கவில்லை. பருவம் அடையாத அந்த இளம் மனைவி பருவம் அடையும்போது அவன் அறுபது வய

தினன் ஆய்விடுவான் என்பதை கவனிக்கவில்லை. விவாகத்தின்போது அவளுக்கு வயது பத்து நிரம்பவில்லை. அவளுக்கு இருபது வயது நடக்கும்போது அவன் அறுபது வயதுக்கு மேற்பட்டவனாய்விட்டான். தனக்கு சாப்பாடு போடவும் மற்றும் சௌகரியங்களைக் கவனிக்கவும், அவன் இளம் மனைவியை விரும்பினான். இருபது வயது நிரம்பிய ஆரோக்கியமான பெண் தன்னுடைய கணவனிடமிருந்து ஒரு உயர்ந்த சுகத்தை எதிர்பார்க்கிறாள். ஒன்று சேர்க்கப்பட்ட இவ்விருவரின் வேறுபாடு பின்னால் செய்யப்பட்ட குற்றத்திற்கும் அதனால் ஏற்பட்ட தண்டனைக்கும் காரணமாயிற்று.

பத்து வயதுப் பெண்ணை மணந்த கிழவனைக் குறைகூற முடியாது. அவன் ஒன்றும் தெரியாத கிராமவாசி. வயது வந்த பெண்ணை அவன் கிராமத்தில் மணக்கமுடியுமா? காதலுக்காக இல்லாவிட்டாலும் குடும்பத்தை நிர்வகிப்பதற்காகவாவது வயதுவந்த பெண் மேல் என்று அவன் கருதியிருப்பான். இருப்பினும் அவன் மற்றவர்களைப்போல் கிடைக்கக்கூடிய பெண்ணை மணந்து வயதடையும் வரையில் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் இவன் காத்திருக்கும் காலத்தில் கிழம்தட்டி மணமகளுக்குத்தான் செய்யவேண்டிய கடமையில் அசக்தனாகி அவளிடமிருந்து சாதம் சமைக்கும் அடிமைத் தொண்டைமட்டும் எதிர்பார்க்கக்கூடியவனாக மாறிவிட்டான்.

இதன் முடிவாக அவள் கிராமத்துக் காலாடி ஒருவனுடன் கூடா நட்புக்கொள்ள ஆரம்பித்தாள். சமூக நீதிப்பிரகாரம் அவள் கற்பென்னும் நெறியிலிருந்து தவறினாள்.—தனது கணவனுக்குத் துரோகம் செய்தாள். இந்தக் கதையிலிருப்பதுபோல் கணவன் வயது முதிர்ந்தவனாய் மனைவியின் ஆவலைப் பூர்த்திசெய்ய இயலாதவனாய் இருந்தபோதிலும் மனைவி அவனுக்கு உண்மையாயிருக்கவேண்டும். நமதுசமூகத் திட்டங்களை ஏற்படுத்தியவர்கள் இயற்கையின் விதியையே

வென்று படைத்தவனின் குற்றத்தையும் திருத்தவேண்டு மென்று விரும்பினர். காதல் உணர்ச்சி இயற்கையானது; அதைத் தடுக்க எவராலும் முடியாது. இது பாபமுள்ள ஆசையாயிருந்தால் கடவுள் இதை ஏன் தன்னுடைய சிருஷ்டித் திட்டத்திலிருந்து ஒதுக்கவில்லை? பாப உணர்ச்சியை ஏற்படுத்தி அதை மனிதவர்க்கம் வெல்ல வேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார் என்றுவிவாதிப்பது மூடவேதாந்தம். கடவுள்நல்லவராயிருந்தால் அவரால் சிருஷ்டிக்கப்பட்டதாகச் சமூகக் கட்டுப்பெட்டிகளால் கருதப்படும் ஒவ்வொன்றும் நன்மைதரக்கூடியதாயிருக்கவேண்டும். இந்த உலகில் ஒழுகத்தைப் பிரசாரம் செய்பவர்கள் மிகவும் ஒழுக்கம் கெட்டவர்கள்; மத பக்தி அதிகமுள்ளவர்கள்தான் மதத்தை முற்றிலும் அவமதிப்பவர்கள். கடவுளின் சிருஷ்டித் திட்டத்தைச் சீர்படுத்த முயல்வது கடவுளையே அவமானப்படுத்துவதாகும். முட்டாள்தனமான சமூகத் திட்டங்களையும் ஒழுக்கத்தைப் பற்றிய தங்களுடைய வக்கிர புத்தியையும், மதத்துக்கு விரோதமான கொள்கைகளையும்விட்டுவிடாமல், வைதிகர்கள் கடவுளின் இஷ்டப்படி இயற்கையின் விதிக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்களைத் துன்புறுத்துகிறார்கள். கிழவனின் இந்த இளம் மனைவி மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமூகச் சட்டங்களையும் இயற்கையின் விதிகளையும் ஒரே சமயத்தில் பின்பற்ற முடியாது. அவள் கடவுளின் இயற்கை விதியைப் பின்பற்றினாள். கடவுளுக்குத் திருப்தி செய்வதுபோல் பாசாங்கு செய்துகொண்டு கடவுளின் இயற்கை விதியைவிடத் தங்களுடைய அறிவு உயர்ந்தது என்று சொல்லிக்கொள்ளும் சமூக நீதியின் கண்களின்முன் அவள் குற்றவாளியானாள்.

அந்தப் பெண் அசாத்திய வீரமும், புகழக்கூடிய தைரியமும், வெளிப்படையான பேச்சும் உடையவளாகத் தெரிகிறது. நமதுசமூகத்தில் இந்த குணங்களுக்கு பெருமைதரவேண்டும். கிழவன் அவளைக் கொல்ல விரும்பவில்லை என்று சொன்னான்.

அவன் அவளை அந்தத் தீய வழக்கத்தை விட்டுவிடும்படி நீதி சொன்னான். அவனுடைய வசவுக்கு அவள் அவமரியாதையாக எதிர்த்துப் பேசியதால் அவன் அடங்காக் கோபம் கொண்டான். அவள் தான் சிறு வயதினளாயிருந்ததால் தனக்கு ஒரு இளையகணவன் வேண்டுமென்று வெகுதிமிராகப் பதில் சொன்னாள். அவனை விட்டு விட்டு வேறு ஒருவனை விவாகம் செய்துகொள்ள முடியாததால் அவள் அவ்வாறு கள்வு ஒழுக்கத்தில் ஈடுபட நேர்ந்தது என்றும் தைரியமாகச் சொன்னாள். மேலும் அவள் தன்னுடைய கணவனுக்குத் தான் செய்யவேண்டிய கடமையாகிய வீட்டுவேலைகளைக் கவனித்தல், அவனுடைய பொது சௌகரியங்களுக்கு வேண்டியவற்றைச் செய்தல் முதலியவற்றைத் தான் சரிவர செய்வதாகவும் கணவன் என்ற கடமையைச் செய்ய சக்தியற்றவனாய் அவன் இருப்பதால் தன்மீது குற்றஞ்சாட்டுவது அர்த்தமற்றது என்றும் சொன்னாள். வைக்கோல் போரின் மேல் படுத்திருக்கும் நாயைப்போல் அவன் தானும் அநுபவியாமல் சமூக திட்டத்தின்படி அவளுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே வழியாகிய கள்ளக்காதல் பிரகாரம் பிறரும் அவளை அநுபவியாமல் செய்வது நியாயமற்றது.

இது எதிர்பார்க்கப்படாத வசவு. இதனால் கிழவன் கோபமடைந்து அவளைக் கொன்றான். தண்டனை அடைந்த பிறகும் பத்துவருஷக் கடுங்காவல் தண்டனை எதிரேயிருந்த போதும் அந்தக் கிழவன் இந்த ஒழுங்கீனமான எதிர் வார்த்தைகளுக்காகக் கொதித்துக்கொண்டிருந்தான். ஆனால் அவன் வருத்தப்பட்டது ஒழுக்கத் தவறுதலுக்காகக்கூட அல்ல; சொத்துரிமை ஆக்கிரமிக்கப்பட்டதற்காகவே. அந்தப்பெண் அவனுக்கு உரிமையானவள்; அவள் தன்னுடைய தேகத்தை ஒரு காலிப்பயலுக்கு இணங்கச் செய்துவிட்டு வெட்கமில்லாமல் பச்சை வார்த்தைகளில் தான் செய்தது நியாயம் என்று வாதிட்டது அகம்பாவம். அவள் தன்னு

டைய கணவனுக்குத்தான் தன்னுடைய உடல் பாத்தியப் பட்டது என்பதை ஒப்புக்கொண்டு அவனுக்கு உண்மையுள் ளவளாகப் பாசாங்கு செய்துகொண்டு திருட்டுத்தனமாக விபசாரம் செய்தாலும் ஓரளவு மன்னிக்கலாம்! ஆனல் அவள் வீட்டைப் பார்த்துக்கொள்வதையும் கிழவனுடன் சுக மில்லாமல் படுக்கையைப் பங்கிட்டுக் கொள்வதையும விட வேறு ஒன்று வேண்டும் என்று கிறுக்கு புத்தியுடன் கேட்டது அகம்பாவம்.

இயற்கையால் ஒவ்வொரு பெண்ணுக்கும் தாயாகும் உரிமை கிடைத்திருக்கிறது. ஒரு பெண்ணை இந்த நிலையில் வைத்துக் கற்பிலிருந்து தவறினல் சமூக தண்டனைகளுக்கு இலக்காவாள் என்று பயப்படுத்துவது அவளுக்கு இந்த உரிமையை மறுப்பதாகும். ஒரு பெண்ணுக்குத் தாயாயிருக் கும் சந்தோஷத்தை மறுப்பதை விட வேறு ஏதாவது ஒழுங் கீனமான பாபம் இருக்க முடியுமா? குழந்தைகளைப் பெற விரும்புவதைக் குற்றமாக எந்தநிதிமானும் சொல்லமாட்டான். அப்படியிருக்க, ஆண் - பெண் கூடுதலைப்பற்றி அவர்களு டைய முட்டாள்தனமான விதிகளைப்பற்றி நியாயம் என்று அவர்கள் எப்படி சொல்லமுடியும்? தாயாவதற்கு வேறு வழி கிடையாது. தாய்த்தன்மை தெய்வத்தன்மையானது என் ருல் அதை அடையும் வழியும் பாபகரமான தாயிருக்கமுடி யாது. இயற்கையான வேட்கையை முட்டாள்தனமான சமூகத்திட்டத்தால் அடக்க முயன்ருல் அது வேறுவழிகளில் அதைத் தணிக்க முயல்கிறது. இயற்கையின் விதிக்கு எதி ராகச் செல்லும் சமூக நீதி நியாயமற்றது. அது குற்றத் திலும், கொடுமையிலும் சேர்க்கப்படவேண்டியது.

V

இரண்டு பேர்கள் மரணமடைவதற்கு உடந்தையாக இருந்ததற்காக மத்திய வயதுடைய ஸ்திரீ ஒருவள் நீண்ட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டாள். இதில் அவள் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்படவில்லை. அவளுடைய வயதுவந்த மகன் ஒருவனும் இதற்கு உடந்தையாயிருந்ததற்காகத் தண்டிக்கப்பட்டான்.

இந்தக் குடும்பம் நகரத்தைச் சேர்ந்தது; கொஞ்சம் செல்வமுள்ள வியாபார வகுப்பினர். இந்தக் குடும்பத்தினர் இருந்த வீட்டின் அருகிலுள்ள ஒருசந்தில் புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையின் சவம் கண்டுபிடிக்கப்பட்டது. போலீசார் புலன் விசாரித்ததில் குழந்தையின் சவம் காணப்பட்டதற்கு முதல் நாள் இரவு இந்தக் குடும்பத்திலுள்ள ஒரு இளம்விதவை "ஜுரத்"தால் இறந்ததாகத் தெரியவந்தது. கடைசியில் இந்தக் கதையின் உண்மை வெளிவந்தது. கர்ப்பத்தைக் கலைக்க முயற்சிசெய்ததில் தாயும் சேயும் இறந்தார்கள். அசௌகரியமாயிருந்த மகளுடன் தாயார் மட்டுந்தான் அன்று இரவு வீட்டில் இருந்தாள். ஆகையால் அவளும் கைதுசெய்யப்பட்டாள். அவளுடைய மகன் அந்தப்பெண் இறந்ததற்கு முதல் நாள் ஒரு டாக்டரை அவளுக்கு "ஜுரத்"துக்கு சிகிச்சை செய்ய அழைத்து வந்ததால் அவனும் இந்த கர்ப்பத்தை கலைக்கும் குற்றத்தில் கலந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டான். டாக்டர் பார்க்கும் பொழுது அந்தப்பெண் உடம்பு முழுவதும் போர்த்தப்பட்டு ஜுரத்தால் கஷ்டப்படுபவள் போலிருந்தாள். டாக்டரும் இந்த

கர்ப்பத்தைக் கலைக்கும் குற்றத்தை நேரில் இருந்து செய்யாவிட்டாலும் மறைமுகமாக அதற்கு வேண்டிய மருந்தைக் கொடுத்தனுப்பியிருப்பார் என்று சந்தேகிக்கப் பட்டார். ஆனால் இதற்குப் போதுமான சாட்சியங்கள் கிடைக்கவில்லை.

இந்த பரிதாபகரமான கதையில் யார் யார் பங்கு எடுத்துக்கொண்டார்கள் என்பதும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் இதில் எவ்வளவு தூரம் பொறுப்பு என்பதும் முக்கியமான விஷயமல்ல. நாம் கவனிக்கவேண்டிய உண்மை இதுவே. கௌரவமான குடும்பத்தில் உள்ள ஒரு யௌவன விதவை கோஷாமுறை அனுஷ்டானத்திலிருந்தபோதிலும் விபசாரம் செய்தாள்; அவள் ஒருவனைக் காதலிக்காமலிருக்கலாம், ஆனால் தன்னுடைய காமவேட்கையை ஆற்றிக்கொள்ள எவனையாவது நாடியிருக்கவேண்டும். அதன் முடிவு கர்ப்பம். அதை எவ்வளவு காலம் மறைக்க முடியுமோ அவ்வளவு காலம் மறைத்து வைத்தாள். கண்மூடித்தனமாக மூட சமூக வழக்கங்களைப் பின்பற்றியதால் தன் மகளுக்கும் குடும்பத்தின் பெயருக்கும் ஏற்பட்ட துரதிர்ஷ்டத்தைத் தாயார் முடிவில் தெரிந்துகொண்டாள். இதை எவ்வாறு தவிர்க்க முடியும்? குடும்பத்தின் கௌரவமான பெயர் காப்பாற்றப்படவேண்டும் ஒழுக்கத்திலிருந்து வழுவிய மகளை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவதால் குடும்பத்தின் பெயரைக் காப்பாற்ற முடியாது. மேலும் ஒழுக்கத்தவறுதல் வீட்டின் அலமாரியிலுள்ள எலும்புக்கூடாக இருக்கலாம். நகரங்களில் கோஷாப் பெண்கள் வெளியே அதிகமாகப் போகாமல் கண்காணிக்கப்படுகிறார்கள். ஆகையால் ஒழுக்கத்தவறுதல் ஏற்பட்டுவிட்டால் தன் கற்பைக் கட்டாயத்தின் பேரில் காப்பவர்கள்

கண் எதிரே தான் அவள் நடமாடியாகவேண்டும் ஆகை யால் மகளின் ஒழுக்கத்தவறுதல் வெளிக்குத் தெரிந்தால் குடும்பத்தார் விபசாரத்தை ஆதரிக்காவிட்டாலும் அதற்கு மறைமுகமாக உடந்தையாயிருந்தார்கள் என்று அந்தக் குடும்பத்துக்குக் கெட்டபெயர்வரும். ஆகையால் ஒழுக்கம் தவறிய பெண்ணின் தாயார் என்ன செய்வது என்று தெரியாமல் கடைசியாக கர்ப்பத்தைக் கலைப்பது தான் இதிலிருந்து தப்புவதற்கு ஒரே மார்க்கம் என்று முடிவுசெய்திருக்க வேண்டும். கர்ப்பத்தைக் கலைத்தல் சட்டப்படி குற்றம்; ஒழுக்க நியதிப்பிரகாரம் தவறு.

ஒரு விவாகம் ஆகாத பெண்ணோ, விதவையோ தாயாகிவிட்டாள் என்றால் சமூகம் குரூரமாக இருக்கிறது; சமூகம் வெறுக்கும் கர்ப்பத்தை இவர்கள் கலைத்தாலும் சமூகம் அதைப் பாபமாகக் கருதுகிறது. இது என்ன விசித்திரம். ஒழுக்கத்தின் கண் முன்னும், சட்டத்தின் நீதிப்படியும் கர்ப்பத்தைக் கலைத்தல் கொலைக் குற்றமாக கருதப்படாவிட்டாலும், மரணத்திற்குக் காரணமான காரியத்தைச் செய்த சற்றுக் குறைவான குற்றமாகக் கருதப்படுகிறது. பாபத்தை மறைப்பதற்காகச் செய்யும் செய்கையும் பாபமானது என்று ஒழுக்கநீதி கூறுகிறது கணவனில்லாத நிலையில் கர்ப்பம் அடைதல் பாபமாயிருந் தால் அந்த கர்ப்பத்தில் ஜனித்த சிசுவும் பாபத்தின் அடையாளமாகக் கருதப்படவேண்டும். ஆகையால் ஒழுக் கத்தை களங்கமாக்கும் இந்தச் சிசுவை ஆதரிக்கமுடி யாது. ஆகையால் ஒழுக்கத்தைக் காப்பாற்றும் புரு ஷோத்தமர்கள் இந்த சிசுக்கள் கொலைசெய்யப்படுவதை யும், கருவில் கலைக்கப்படுவதையும் ஆதரிக்கவேண்டு மல்லவா?

கர்ப்பத்தைக் கலைப்பதைக் குற்றமாகக் கருதும் சட்டநீதியின் தாத்பரியம் அறியவே முடியவில்லை. குழந்தை பிறக்காத வரையில் அதை சமூகத்தில் வசிக்கும் ஒரு ஆசாமியாக கருதப்படுவதில்லை. ஆகையால் கர்ப்பத்தைக் கலைப்பதைக் கொலையாகவோ அல்லது கொலைக்கு ஏதுவான காரியமாகவோ கருதக்கிஞ்சிற்றும் இடமில்லை. சமூகத்தில் இடமில்லாத ஒரு பொருளைப் பாதிக்கும் ஒரு செய்கைஸ்யை சமூகத்துக்கு விரோதமான காரியமாக எப்படிக் கருதமுடியும்? ஆகையால் சமூகத்துக்கு விரோதமான செய்கைகளைத் தண்டிப்பதற்கு ஏற்பட்ட சட்டத்தின் கீழ் கர்ப்பத்தைக் கலைத்தல் வரவில்லை. மேலும் பிரசவம் ஆகும் வரையில் குழந்தை தாயின் ஒரு பாகமே ஆகும் அவள் தேகமின்றி அந்தக் குழந்தைக்குத் தனி இடமில்லை. அது அவள் திரேகத்திலிருந்து உயிர் பெற்றது. ஒரு பொருளுக்கு பாத்தியதை உள்ள ஒரு மனிதனுக்கு அதை அழிக்கவும் பாத்தியதை உண்டு. ஒரு பெண் தனக்குச் சொந்தமான 'முத்துமாலையை' நெருப்பில் எறிவதைக் குற்றமாகச் சட்டம் தண்டிப்பதில்லை. ஆனல் அந்தப் பெண்ணுக்கு முத்துமாலையை விட அதிக சொந்தமான தன் வயிற்றிலுள்ள கருவைக்கலைப்பதைக குற்றமாக சட்டம் தண்டிக்கிறது. இது முட்டாள்தனமல்லவா? ஒருவன் தன் உடம்பில் ஒரு காயத்தை உண்டாக்கிக் கொள்வதைக் குற்றமாகக் கருதுவதைவிட இது கேவலமானது. குழந்தை பிறந்தவுடன் அது தன் தாய் தந்தையருக்கு சொந்தமாவதுடன் சமூகத்திற்கும் ஒரு தூணாகிறது. ஆனல் பிறப்பதற்குமுன் கருகிலையில் அது தாய்க்கு மட்டும் சொந்தமானது. ஆகையால் கருவைக் கலைப்பதைத் தண்டிப்பதால் கிரிமினல் சட்டம் தனது

சித்தாந்தத்தின் மூல தத்துவத்திற்கு எதிராகவே நடக்கிறது. சொத்துரிமையை சட்டம் தண்டிப்பதாக மாறுகிறது. மேலும் கரு இயற்கையால் அளிக்கப்பட்ட ஒரு சொத்து. — வேறு ஒருவருக்குக் கொடுக்கமுடியாத சொத்து. குழந்தை பிறப்பதற்கு முன் அது சமூகத்தில் ஒரு அங்கம் ஆவதில்லை. ஆகையால் சமூகம் அதற்கு பாதுகாப்பு அளிக்க முயற்சிக்க வேண்டியதில்லை. கரு தான் பாதுகாக்கப் படவேண்டும் என்று கருதுகிறதென்று எப்படிச்சொல்ல முடியும்? சமூகத்திலுள்ள ஒரு நபர் உண்மையாக உதவியை நாடும் ஸ்திதியிலிருக்கும்போது சமூகம் உதவிசெய்ய முன் வருவதில்லை. கணக்கற்ற குழந்தைகள் போதுமான போஷிப்புள்ள உணவு இல்லாமலும், அசௌக்கியமான காலங்களில் டாக்டர்களின் உதவியில்லாமலும், சுகாதாரக் குறைவான வீடு சுற்றுப்புறம் இவற்றில் வசிப்பதாலும் இறக்கின்றன. இவை சமூக புறக்கணிப்பின் குற்றமே. இருப்பினும் இதற்கு யார் தண்டனையளிக்கிறார்கள். கருவிலிருக்கும் சிசுவைத் தன் ஆதரவில் சமூகம் ஏற்றுக்கொள்வது, பிறகு அவை ஜனித்ததும் கொலைசெய்யலாம் என்பதற்காகவா? அரசாங்கம் மனிதக்கூட்டங்களை பெரிய எண்ணிக்கைகளில் அநேக வழிகளில் கொல்கின்றது. யுத்தம் இதற்கு மிகவும் வெளிப்படையான ஒரு உதாரணம். அரசாங்கம் செய்யும் குற்றத்திற்கு ஒப்பிட்டால் மிகமிகக் குறைவாயிருக்கும் ஒரு குற்றத்திற்காக ஒரு நபரை அதே அரசாங்கம் தூக்குமேடைக்கு அனுப்புவது அகம்பாவமல்லவா? கருவைக் கலைப்பது தண்டிக்கக்கூடிய ஒரு குற்றமா? இது ஒரு முட்டாள்தனமானது என்பது சொல்லாமலே தெரியும்.

கருவைக் கலைப்பது குற்றமாயிருந்தால், கருவைக் கலைக்கும் நிலையில் ஒரு பெண்ணை வைப்பது சமூகத்தின் குற்றம் ஆகும். கணவனால்தான் ஒரு பெண் கர்ப்ப மடையவேண்டும் என்பது சமூகத்தின் நீதி. விவாகம் என்பது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒருசடங்கு ஆனால் கர்ப்பமடைதல் இயற்கையால் அளிக்கப்பட்ட ஒரு வெகு மதி. மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமூக நியதியிலேதான் ஒரு பெண் தன்னுடைய இயற்கையான வேட்கையைப் பூர்த்திசெய்ய வேண்டும். ஆனால் சமூகத்திட்டத்தில் விதவைகளுக்கு இந்த வேட்கையைப் பூர்த்திசெய்ய இடம் இல்லை. எப்படிப் பார்த்தாலும் ஒரு பெண் கர்ப்பமடைவதை ஒழுக்கத் தவறுதல் என்று கூறுவது நியாயமாகாது. விவாகமாவதற்கு முன் தாயாகிய பெண்ணை பாபி என்று பறைசாற்றுவது நியாயமற்றது. ஒரு விதவைக்கும் தாயாகும் பாத்தியதையை இயற்கை அளித்திருக்கிறது. இதை அவளுக்கு மறுப்பது என்ன நியாயம்? கர்ப்பத்தைக் கலைக்கவேண்டிய நிலை சமூகத்திலிருந்து மறைந்தொழிய வேண்டும். ஒரு தாயார் தன்னுடைய பிள்ளைப்பேற்றைப் பற்றி கர்வமடைவதற்குப் பதிலாக் அவமானப்பட வேண்டிய நிலைமையிலிருக்கும் போது வேண்டா வெறுப்புடன் கர்ப்பத்தைக் கலைக்கிறாள். விபசாரத்தினால் உண்டான கர்ப்பத்தை அவமானமாகக் கருதி அதைக் கலைப்பதற்கு, மோசமான - ஆபத்தான மருந்துகளை ரகசியமாக ஆரோக்கியக் குறைவான நிலையில் உபயோகிப்பதால் தாயின் உயிருக்கும் ஆபத்து உண்டாகிறது. சில சமயம் பெண்ணின் பாபத்தால் உண்டாகிய கரு இறக்கவேண்டுமென்று தாயாரே கொலைசெய்யப்படுகிறாள். நான் இங்கு சொன்ன கேசிலும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கவேண்டும்.

மனவேதனையுற்ற தாயார் தன்னுடைய மகளின் நடத்தையை எவ்வளவு வெறுத்தபோதிலும் அவளைக் கொலைசெய்ய வேண்டுமென்று ஒருக்காலும் நினைத்திருக்கமாட்டாள். குடும்ப அவமானத்தையும், சமூக பகிஷ்காரத்தையும், தடுப்பதற்காகச் செய்தகாரியம் துரதிர்ஷ்டம் வாய்ந்த பெண்ணின் உயிருக்கு ஆபத்தாய் முடிந்தது. தாயார் வருத்தப்பட்டிருப்பாள் என்பது நிச்சயம். இரக்கமற்ற சமூகத்தையும், கிறுக்கு புத்தியுள்ள ஒழுக்க நீதியையும் திருப்திசெய்வதற்காக அவள் செய்த செய்கையால் அவள் அடைந்த வருத்தம் போதாதென்று அவள் சட்டத்தினுலும் தண்டிக்கப்பட்டாள். சட்டத்திற்கும் அவள் அபராதியானுள். அநியாயம், குரூரம் இவற்றுல் பாதிக்கப்பட்ட உதவியற்ற தாயார் தன்விதியை நொந்து தன்னுடைய கர்மாவினுல் இந்தத்துன்பம் உண்டாயிற்று என்று தன்னை சமாதானப்படுத்திக்கொண்டாள்.

VI

அடுத்தபடியாக சொல்லப்படும் வழக்கில் ஒரு மனிதனைக் கொன்றதற்காக ஒரு குடும்பம் முழுவதும் தண்டனையளிக்கப்பட்டது. மொத்தத்தில் ஆறு நபர்கள் தண்டிக்கப்பட்டார்கள். அவர்களில் இரண்டு ஸ்திரீகளும் இருந்தார்கள். தந்தையும் அவனுடைய மூன்று புதல்வர்களில் ஒருவனும், தூக்குத் தண்டனை அளிக்கப்பட்டார்கள். மீதி இரண்டு புதல்வர்களும், தாயாரும் ஒரு மகளும் ஆயுள் தீவாந்திர தண்டனையளிக்கப்பட்டார்கள்.

கொலை செய்யப்பட்டவன் அந்த கிராமத்திலுள்ள வட்டிக்கடை முதலாளி. அவனைக் கொலைசெய்ததாகத் தண்டிக்கப்

பட்ட் குடும்பத்திற்கு சில கா்ணி நிலங்கள் இருந்தன. அதில் வரும் வருவாயைக் கொண்டு அவர்கள் ஜீவித்துவந்தார்கள். இந்த நிலத்தின் மீது அதிக கடன் வாங்கியிருந்தார்கள். இந்திய குடியானவர்கள் கடனாளிகளாயிருப்பது ஆச்சரியமல்ல! நிலம் அடமானம் வைக்கப்பட்டிருப்பதால் அந்தக் குடும்பத்தினருக்கு அவசியமான அந்த நிலத்தின் வருவாய் கடன் கொடுத்த வட்டிக்கடைக்காரனைச் சட்டப்படி சேர்ந்தது.

குற்றச் சாட்டின்படி ஒருநாள் அந்தக் குடும்பத்தினர் இந்த வட்டிக்கடைக்காரனை கடன்விஷயமாக சில விஷயங்கள் பேசவேண்டுமென்று வீட்டுக்கு அழைத்து அத்துடன் ஒரு விருந்தும் அளிக்க ஏற்பாடு செய்தார்கள். அவனுக்கு விஷம் கலந்த உணவு கொடுப்பதாக அவர்கள் திட்டம்போட்டிருந்தார்கள் என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிறது; ஆனால் எப்படியோ அவன் இதிலிருந்து தப்பினான். இந்த மாதிரி திட்டம்போட்டிருந்தது உண்மையாயிருந்தால் வீட்டிலிருந்த ஸ்திரீகளும் இதில் கலந்திருக்கவேண்டும் என்பது வெளிப்படை. ஆனால் கொலைசெய்ய ஏற்பாடு செய்தவர்கள் இந்தக் கருணையிருந்த வட்டிக்கடைக்காரனை ஏழைகளிடமிருந்து அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த உணவை சாப்பிடமுடியாமல் தனக்கு வட்டிக்கு வட்டியாக வசூலிக்கும் சிரமத்திலிருந்து காப்பாற்ற வேண்டி ஒழித்துவிடவேண்டுமென்று முடிவு செய்தார்கள். போலீசாருடைய வாதத்தின்படி கெட்டிக்கார வட்டிக்கடைக்காரன் ஏதோ சந்தேகித்து விருந்திலிருந்து அவசரமாகத் திடீரென்று எழுந்து சென்றுவிட்டான். அந்தக் குடும்பத்துத் தந்தையும், ஒரு மகனும் அவனைப் பின்தொடர்ந்து சென்று வழியில் உள்ள ஒரு காட்டின் மத்தியில் வெட்டிக் கொலை செய்தார்கள். போலீஸ் வாதத்தின் பிரகாரம் வட்டிக்கடைக்காரனுடைய நடத்தையிலிருந்து அவன் அவர்களுடைய சதியைக் கண்டுபிடித்துவிட்டான் என்று சந்தேகித்த குடும்பத்தார் அவன் இதை போலீ

சாரிடம் சொல்லி தங்களை சங்கட்த்தில் விட்டுவிடுவான் என்று பயந்து இதைத் தடுப்பதற்காக அவனை ஒழித்தார்கள். விஷத்தின் மூலமாக ஈர்சுக்காக செய்ய உத்தேசித்த காரியத்தை முரட்டுத்தனமான முறையில் செய்தார்கள்.

குற்றவாளிகள் பின்வருமாறு வாதம்செய்தார்கள். கடன் தொகை முழுவதையும் உடனே திருப்பித்தராவிட்டால் நிலத்தை ஆக்ரமிக்கப்போவதாக வட்டிக்கடைக்காரன் பயமுறுத்தினன. அவனுக்கு விருந்துசெய்து சந்தோஷப்படுத்தி அவ்வாறு நிலத்தைப் பிடுங்கவேண்டாமென்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வதாக அவர்கள் உத்தேசம் செய்திருந்தார்கள். ஆனல் இந்தியாவில் தர்மசிந்தை இருப்பதாகச் சொல்லிக்கொண்ட போதிலும், அமெரிக்கர்களைப்போல் பணத்தாசைகொண்ட வட்டிக்கடைக்காரன் விருந்துசாப்பிடுவதற்குமுன் கடனைத்தீர்க்கவேண்டுமென்று பிடிவாதம் செய்தான். யோக்கியமானவர்களும், தெய்வத்திற்கு பயந்தவர்களும் விருந்து முதலியவற்றில் பணத்தை விரயம் செய்யாமல் பட்ட கடனைத்தீர்க்க உபயோகிக்க வேண்டுமென்று அவன் கோபமாக அந்தக் குடும்பத்தினரை வைதான். மேலும் நல்லவர்கள் சட்டப்படி கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்துவிட்டு பட்டினி கிடப்பார்கள் என்று சொன்னன். இதனல் விருந்தளிக்க உத்தேசித்தவர்கள் கோபமடைந்தார்கள். சிறிய சச்சரவு ஏற்பட்டது. வட்டிக்கடைக்காரன் கோபத்துடன் தான் போலீசாரிடம் சென்று அவர்கள் அவனுக்கு விஷமூட்டுவதற்கு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள் என்று புகார்செய்யப் போவதாகச் சொல்லிவிட்டுப்போனன்.

அவனுடைய பயங்கர பயமுறுத்தலால் கலக்கமடைந்த தந்தையும் ஒரு மகனும் அவனைக் கெஞ்சி சமாதானம் செய்வதற்காகப் பின் தொடர்ந்தார்கள். சமாதானம் அடைவதற்கு பதிலாக, வட்டிக்கடைக்காரன் இன்னும் கோபமடைந்து அந்த குடும்பத்திலுள்ள பெண்களையும் இழிவாக வைதான்.

அந்த மகனுடைய மனைவியையும் வைத்ததால் கோபமடைந்த அவன் உணர்ச்சிவேகத்தில் அவனைக் காயப்படுத்தினான். அவனை இந்த நிலையில் விட்டுவிட்டால் அவர்களுக்கு இன்னும் ஆபத்து உண்டாக்குவான் என்று பயந்து அவனுடைய நாவை அடக்குவதற்காக அவசரப்பட்டு மூர்க்கமாய் நடந்த மைந்தனுக்குத் தந்தையும் உதவிசெய்து அவனைக் கொலை செய்தான். ஆகையால் இவர்கள் இருவர்களையும் பொறுத்த வரையில் அவர்களே கொலையை ஒப்புக்கொண்டார்கள். சட்டமும் கவலைப்படாமல் அவர்களைத் தூக்குமேடைக்கு அனுப்பிற்று. மற்றவர்களுடைய குற்றத்திற்கு நேரடியான சாட்சியம் இல்லாவிட்டாலும் சந்தர்ப்ப சாட்சியத்தைக் கொண்டு மிக அதிகமாகக் கொடுக்கக்கூடிய ஆயுள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

போலீசார் வழக்கைச் சரியாக நிரூபித்துவிட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். (சட்ட நியதியைப் பொறுத்த வரையில் குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டிருக்க மாட்டார்கள் அல்லவா?) குற்றவாளிகள் சொல்லியது சரியல்ல என்றும் கருதுவோம். இந்தக் கொலை நடப்பதற்கு அடிப்படையான காரணங்கள் என்ன? சமூகம் இப்பொழுதிருக்கிற நிலையிலேயே இருக்கவேண்டும் என்பதை ஆதரிக்கும் கிரிமினல் சட்டம் குற்றத்திற்கு காரணமாயிருக்கும் சமூகக் குற்றங்களைக் குற்றத்திற்கு மூலகாரணமாக ஒப்புக்கொள்வதில்லை. சமூக கட்டாயத்தின் மேலேயே நடத்தப்படும் சட்ட நியாயம் குற்றத்திற்குக் காரணமான சமூகநிலையை வழக்கிற்கு சம்பந்தமற்ற சாட்சியமாகக் கருதுகிறது.

இருப்பினும், சட்டநீதியிலும் முன் யோசனையில்லாமல் திடீரென்று செய்யும் குற்றத்திற்கு சிறிது குறைந்த தண்டனையைக் கொடுக்க இடம் இருக்கிறது. அத்தகைய நிலை இந்த வழக்கில் இல்லையா? இவ்வழக்கில் நேரடியாக சம்பந்

நிப்பட்டர்த மற்ற நால்வர்களைப் பொறுத்தவரையிலாவது தண்டனையைக் குறைவாகக் கொடுக்க இடமில்லையா? அதி லும் அந்த இரண்டு ஸ்திரீகளுக்காவது இரக்கம் காட்டப் பட்டிருக்க வேண்டுமே?

ஆனால் நம்மைப்பொறுத்த வரையிலும் ஒரு குறிப்பிட்ட வழக்கைப்பற்றியும், ஒரு குறிப்பிட்ட நபர்களுக்குக் கொடுக் கப்பட்ட தண்டனையைப்பற்றியும்; அதிகயாக ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. ஆனால் இத்தகைய வழக்குகளுக் குப் பொறுப்பு குற்றவாளிகளைத் தண்டிக்கும் சமூகத்தைச் சந்தேகமில்லாமல் சேர்ந்தது என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது. சட்டத்தைப் பொறுத்தவரையில் அது முற்றி லும் ராஜீய ஆயுதமல்ல. அதற்கு சமூக ஆதரவும் இருக்கி றது. இந்திய சமூகம் இத்தகைய குற்றத்திற்கு அநேகர் கடும் தண்டனையடையும்பொழுது, சட்டங்களை இயற்றுவதில் தனக்குப் பங்கு இல்லை என்றுசொல்லி தன்னுடைய பொறுப் பைக் கழித்துவிட முடியாது. இந்திய சமூகமே! சட்டம் இயற்றுவதில் உனக்குப் பொறுப்பு இல்லையா? வட்டிக்கடை காரனுக்கு நஷ்டம் உண்டாக்காமல் அவனிடம் கடன்பட்ட ஏழைகளுக்குச் சிறிதளவு ஆதரவளிப்பதற்காக சட்டம் கொண்டுவர முயற்சிக்கும்போது சட்டசபையில் ஏன் அவ்வ ளவு எதிர்ப்பு இருக்கிறது? ஒரு குழந்தை பிறப்பதும் அது மனிதனுக உலகில் உயிரோடிருப்பதும் கடவுளின் வெகுமதி. இந்த உயிரையே அழிக்கும் குற்றத்திற்குக் காரணமாக்க் கணக்கற்றவர் கடன் பட்டிருப்பதைத் தடுக்க சட்டபூர்வமாக தீவிர முயற்சி செய்வதை இன்று இந்தியப் பெரியார்கள் பலர் எதிர்க்கிறார்கள். அப்பெரியார்கள் தாங்கள் குடியானவர்க ளுக்கு உதவிசெய்ய விரும்புகிறார்களென்றும், ஆனால் மற்ற வர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்க விரும்பவில்லையென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். நாசத்தில் ஆழ்த்தும் கடன் குழி யிலிருந்து குடியானவர்களைக் கரையேற்ற வேண்டும். ஆனால்

பெரும் வட்டிக்கு அவர்களுக்கு கடன்கொடுத்து ஏராளமான வட்டியையும், வசூல்செய்த பணக்காரனுடைய பாத்தியதை யையும் மரியாதை செய்யவேண்டும். இவ்வாறு சொல்பவர் கள் இந்திய சமூகத்தின் பிரதிநிதிகள்! அவர்கள் தற்போ தைய சர்க்காரை எதிர்த்துப் போராடுவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள், ஆனால் இந்த அரசாங்கத்தாரால் உண்டாக் கப்பட்டு நீதிஸ்தலங்களில் வழங்கப்படும் சட்டத்தை சரி யென்று ஒப்புக்கொள்கிறார்கள். இவர்களுடைய கொள்கை சமூகக் கட்டுப்பாடு இப்போதைய நிலையில் கட்டாயத்தின் மேல் இருக்கவேண்டும் என்பதே இவர்களுடைய கொள்கை.

கடன்களை ரத்துசெய்வதற்காகவும், கடன்காரர்க ளுக்கு நிவாரணம் செய்வதற்காகவும் முயற்சிக்கும் திட் டங்களை எதிர்ப்பவர்கள் கிராமவாசிகள் தான் தாங்கள் கடன்காரர் ஆனதற்கு ஜவாப்தாரி என்று வாதிக்கிறார் கள். கல்யாணம் முதலிய சடங்குகளில் ஆடம்பரமாக செலவுசெய்வதற்காக கடன் வாங்கி கஷ்ட நிலையைக் கிராமவாசிகள் அடைந்தார்கள் என்பது அடிக்கடிசொல லப்படும் ஒரு வாதம். இந்த வாதம் சிறிதளவு உண்மை யேயாயினும், உழைக்கும் குடியானவர்களின் செல்வ நிலையை கொஞ்சம் கவனிக்காமலேயே இந்தவாதம் செய் யப்படுகிறது. உண்மை என்னவென்றால் குடியானவர் களுக்கு விவசாயத்தால் கிடைக்கும் நிகர லாபத்தில் பெரும்பகுதி அவர்களிடமிருந்து பல வழிகளில் பிடுங்கப் படுவதால் அவர்களுக்கு ஜீவனத்துக்கே போதுமானது மீதமிருப்பதில்லை. அநேகமாகக் குடியானவர்கள் எல் லோருக்கும் விவசாயம் செய்வதற்கு வேண்டிய மூலதனம் போதுமானதில்லாததால் அவர்கள் கடன்வாங்கவேண்டி யிருக்கிறது. இந்த அடிப்படையான உண்மை குடியான வர்களின் வறுமையை வெளிப்படுத்துவதோடு தேசத்

தின் செல்வநிலையின் இழிவையும் காண்பிக்கிறது. இது மிகவும் வெளிப்படையாயிருப்பதால் ஒருவருக்கும் இதை மறுக்க தைரியமில்லை. இந்த நிலைமைக்கு பல்வேறு சமாதானங்கள் கூறப்பட்டபோதிலும் நிலைமை அப்படித்தான் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த வியாதி சமூகத்தின் உயிர்உறுப்புகளைச் சாப்பிடுகிறது. இந்த வியாதியை வித்து இல்லாமல் மரத்தை உண்டாக்குவதற்காகச் சொல்லும் மகான்களின் பயிற்சியற்ற மருத்துவத்தால் குணப்படுத்த முடியாது. கைகளைக் கட்டப்பட்ட கருமி அரசாங்கமும் இதற்கு ஒன்றும் செய்யமுடியாது. இந்த அரசாங்கத்தின் முயற்சி இது விஷயத்தில் ஒருவன் தன்னுடைய கால் கட்டைவிரலைப் பிடித்து தன்னைத்தானே ஒரு குழியிலிருந்து மேலே தூக்க முயற்சிப்பதை ஒக்கும். இந்த நீண்ட வியாதியின் அடையாளமாக அவலக்ஷணமான வியாதிகள் தேசமுழுவதும் பரவத்தான் செய்யும். சட்டநீதியாகத் தண்டிக்கப்படும் இந்தக் குற்றங்களை ஒழுக்க நீதியாகப் பார்த்தால் தொத்துநோயால் கஷ்டப்படும் ஒருவனை அந்த வியாதியை அடைந்ததற்காகத் தண்டிப்பதை ஒத்தது.

சமூக சடங்குகளால் தான் கடன்படுதல் ஏற்படுகிறது என்று வாதிப்பவர்கள் இதன் மூலகாரணத்தை ஆராய்ந்து இது யாருடைய குற்றம் என்பதைக் கேட்க வேண்டும். சரியாக சாப்பிடுவதற்குக்கூட வழியில்லாதவர்கள் அடிக்கடி சடங்குகளுக்காக கடன்வாங்கி தங்களுடைய நிலைமையை மோசமாக்கினால் அவர்கள் கட்டாயத்தின் மேல்தான் அவ்வாறு செய்கிறார்கள். சமூக சடங்குகளுக்குச் செலவு செய்வது சமூகத்தினால் கட்டாயப்படுத்தப்படுகிறது. அவர்கள் வேண்டுமென்றே முழுவிருப்பத்

துடன் இந்த ஆடம்பரங்களுக்காகக் கடன் வாங்குவதில்லை. ஆகையால் இதன் பொறுப்பை இதற்காகக் கடன்வாங்கும் குடியானவர்களின் தலையில் சுமத்தமுடியாது. அந்தக் குற்றம் மதசட்டம், சமூக ஆசாரம், பரம்பரை வழக்கம் இவற்றைச் சார்ந்தது.

தந்தை இறந்த பிறகு சிரார்த்தம் செய்வது மைந்தனுடைய கடமை என்று மதம் சொல்கிறது. இதைத் தவறினால் அவனது தந்தையின் ஆத்மாவிற்கு சில அசௌகரியங்கள் ஏற்படுவதுடன், இதைச் செய்யத் தவறியவன் இறந்த பிறகு அவன் நரகலோகத்துக்குப் போவான் என்று சமயம் சாற்றுகிறது. மதசம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட இந்த சடங்குகளை செலவு இல்லாமல் ஸ்தோத்திரம், தியானம் இவற்றால் செய்ய முடியாது. அவை ஆடம்பரமாகச் செய்யவேண்டிய சடங்குகள் ஆதலால் பக்தியும் தியானமும் மட்டும் இவற்றிற்கு போதுமானதல்ல. அவை மத சடங்குகளை நடத்துவதற்காக சொத்துரூபமாக செலவுசெய்ய வேண்டியவை.

இறந்தவர்கள் ஆத்மா சாந்தியடைவதற்காக அவருடைய சந்ததியார் சிலசடங்குகளை அவசியம் செய்யவேண்டுமென்கிற மூட நம்பிக்கை சரியென்று எல்லோராலும் கருதப்படுவதால் இதன் கட்டாயத்தால் சந்தோஷமாக குடியானவர் கடன் வாங்குகிறார்கள். இந்த நாசமான பழக்கத்திற்காகக் குடியானவர்களை குற்றம் கண்டுபிடிப்பது ஒருவனை முதலில் குடிகாரனாகும்படி பழக்கம்செய்துவிட்டு பிறகு குடியில் அவன் பணம் செலவழிப்பதைப் பற்றி குற்றம் கண்டுபிடிப்பதைப் போன்றது. அரசாங்கம் கப்பம்வாங்குவதுபோல் மதமும் வாங்குகிறது. ஜனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு முட்டாள்களாக இருக்கிறார்

களோ அவ்வளவு அதிகமாக அவர்களுடைய ஆத்மாவை காப்பாற்றுவதற்காக கப்பம் வாங்கப்படுகிறது. இந்திய பாமர ஜனங்களுக்கு மனுநீதியும், வேறு மத நீதிகளும் அநேகமாக மோசமான - அயோக்கியத்தனமான அர்த்தத்துடன் கற்பிக்கப்பட்டு நிலைபற்ற அரசாங்க சட்டங்களைவிட அதிக உறுதியாகக் கட்டுப்படுத்துகிறது. அரசாங்க சட்டங்களுக்கு ஜனங்கள் பயத்தினுல் கீழ்ப்படிகின்றனர். ஆனுல் மதநீதிகளை அவற்ருல் பயனடையும் கபடர்கள் போதிப்பதால் மூடநம்பிக்கை கொண்ட ஜனங்கள் தங்களுடைய பழக்கத்தினுல் கீழ்ப்படிகின்றனர்.

பெரும்பகுதியான ஜனங்கள் ஏழைகளாயிருப்பதும், ஏழைகள் மேலும்மேலும் ஏழைகளாவதும் பாபம் விளைவதற்கான செழிப்பான பூமியாகும். இதன் பொறுப்பு இந்த நிலையை ஏற்படுத்திய சமூகத்தையே சார்ந்தது. சமூகத்தின் வியாதிக்குக் குற்றங்கள் அடையாளமேயாகும். டாக்டர் எப்படி அடையாளத்தைக்கொண்டு வியாதியைக் கண்டுபிடித்து சிகிச்சை செய்கிருனே அதைப் போல் இது விஷயத்தில் வியாதியைப் போக்கவேண்டும். தங்களுடைய விருப்பத்துக்கு மாருன கட்டாயத்தின் மீது வாங்கிய கடன்சுமையின் பெரும் பளுவால் அதிக வெறுப்பும், துணிகரமும் ஜனங்கள் அடையும் வரையில் எவ்வளவு கடுமையான தண்டனையை அளித்தாலும் இத்தகைய குற்றங்கள் நடக்கத்தான் செய்யும்.

VII

நூடைசியாகச் சொல்லப்படும் இந்த வழக்கு மிகவும் விசித்திரமானது. இது முன் சொல்லப்பட்ட வழக்குகளைவிட மிகவும் மாறுபட்டது.

இந்த வழக்கிலும் குற்றம் கொலைக்குற்றமே. இதைச் செய்த ஒரு சிறுவன் ஆயுள் தீவாந்திர தண்டனை விதிக்கப்பட்டான். கொலை செய்யப்பட்டவன் ஒரு சாமியார். நியாயாதிபதிக்கு குற்றவாளி கொலைசெய்தான் என்பதில் சந்தேகமே இல்லை. இருந்த போதிலும் முன் யோசனை இல்லாமல் திடீரென்று ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தால் கொலைசெய்யப்பட்டது என்று கருதி அவர் கருணையுடன் இரக்கத்தினால் நீதியின் தண்டனை குறைக்கப்படலாம் என்று உத்திரவிட்டார். கோபம் உண்டாகுவதற்குக் காரணம் இந்தக்கதையை ருசிகரமாக்குகிறது.

குற்றவாளி கூலிவேலைசெய்யும் வகுப்பில் பிறந்தவன். தான் பிறந்த ஊரில் கூலிவேலை கிடைக்காததால் வேலையை நாடி அவன் தூரதேசங்களுக்குச் சென்றான் வேலையில்லாத் திண்டாட்டம் நிரம்பியிருக்கும் இக்காலத்தில் எந்த இடமும் மற்ற இடத்தைப்போல் மோசமாகவே இருக்கிறது. ஆகையினால் அந்தச்சிறுவன் ஊர் ஊராகச் சுற்ற ஆரம்பித்தான். அவனுக்குச் சற்றேறக் குறைய இருபது வயதிருக்கும். இவ்வாறு இவன் வேலையைத் தேடி சுற்றும்பொழுது இந்தப் பரதேசியின் சிநேகிதத்தைப் பிடித்தான். இந்தியாவில் பயிரிடுதல் முதலிய உபயோகமான தொழில்களைச் செய்ய சந்தோஷமாக முன்வருபவர்களுக்கு வேலை கிடைக்காமல் அவர்கள் பசியினால் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் கஷ்டப்படும்பொழுது மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு கணக்கற்ற சாமியார்கள் புல்லுருவிகளாய் ஜீவனம்செய்கிறார்கள். இது இந்திய சமூகத்தின் ஒரு விசித்திரம். நாடோடியான அந்தப்பையன் சாமியாரிடம் தன்னுடைய கதையைச் சொன்னபொழுது அவர் அவனை

தன்னுடைய சீடனுக இருக்கும்படிச் சொன்னர். இவ்வாறு இருந்தால் அவன் தினசரி சாப்பாட்டைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. வேறு வேலை கிடைக்காது என்ற அவநம்பிக்கையில் இந்தியாவில் இப்பொழுதும் லாபத்தை கொடுக்கக்கூடிய ஒரே தொழிலுக்குப் பயிற்சி செய்ய ஆரம்பித்தான். ஆனுல் இந்த ஒப்பந்தத்தில் ஒரு நிபந்தனை இருந்தது. முதலில் சாமியார் இந்த நிபந்தனையைச் சொல்லாது விட்டாலும் பிறகு அதைக் கட்டாயப்படுத்தினர். அசிங்கமான இந்த நிபந்தனைக்கு இந்தச் சிறுவன் கொஞ்சகாலம் வெறுப்புடன் உட்பட்டிருந்ததாகத் தெரிகிறது கடைசியாக இந்தச் சிறுவன் கலக புத்தியுடன் தினசரி பிச்சை எடுத்த ஆகாரத்தில் ஒரு பங்கு கொடுப்பதற்கு விலையாக அருவருக்கத் தக்க செய்கைக்கு தன்னை உட்படுத்தியதற்காக அந்த சாமியாரைக் கொலைசெய்தான்.

அந்தச் சிறுவன் தான் குற்றவாளி அல்ல என்று சொன்னுன். கொலைசெய்யப்பட்ட சாமியாரின் உடல் தனியான ஒரு இடத்தில் காணப்பட்டது. அநேக கிராமவாசிகள் அந்தச் சிறுவன் ரத்தம் நனைந்த துணியுடன் ஓடுவதைத் தாங்கள் பார்த்ததாக சாக்ஷிசொன்னுர்கள். குற்றம் சாட்டப்பட்டவன் பின்வருமாறு சொன்னுன். சாமியாரைக் கொஞ்சநேரம் தூங்கவிட்டுவிட்டு அச்சிறுவன் எங்கேயோ சென்ருன். திரும்பி வந்தபொழுது சாமியார் பயங்கரமாக காயப்பட்டு இருப்பதைப் பார்த்து அவனுக்கு உதவிசெய்ய ஓடினுன். அப்பொழுது அங்கு வந்த யாரோ அவனை பிடித்துக்கொண்டார்கள்.

இந்தக் கொலையில் ஒரு ருசிகரமான சாக்ஷியம் கொலைசெய்ததற்கு நோக்கத்தை தெரிவித்தது. பருத்த

தடியினல் உடம்பு முழுவதும் காயப்படுத்தப்பட்டிருந்த துடன் ஆண் குறியும் நசுக்கப்பட்டிருந்தது. இது அவனைக் கொலைசெய்த மற்ற அடிகளினல் உண்டாக்கப்படவில்லை என்று தெரிந்தது. சாதாரண கொலையாளி ஒருவன் கொலை செய்வதற்காக இந்த இடத்தில் அடிக்கமாட்டான். சாமியார் இறந்தபிறகோ அல்லது எதிர்த்து போராட முடியாத நிலைமையை யடைந்த பிறகோ அந்த சாமியாரின் ஒரு செய்கையின்மீது தன்னுடைய அருவருப்பை காட்டுவதற்காக இந்தப்பாகத்தில் அடித்திருக்க வேண்டும். இந்த அடி கொலைசெய்தவன் எந்த நோக்கத்திற்காக சாமியாரைக் கொலைசெய்திருப்பான் என்பதை தெரிவித்தது. நியாயாதிபதி இந்தக்காரியத்தைக் கொண்டு அச்சிறுவன்மீது நேரடியான சாட்சியம் இல்லாவிட்டாலும் கொலைசெய்தான் என்று தீர்மானித்ததுடன் அவன் கோபநிலையில் இந்தக்குற்றத்தைச் செய்ததாகக்கருதி தண்டனை விஷயத்தில் சிறிதளவு இரக்கம் காட்டினர்.

அந்தச் சிறுவன் தான் சாமியாரைக் கொன்றுன் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. எதற்காக கொலை செய்தான் என்பதும் தெளிவாகத் தெரிந்தது. ஒழுக்க நீதிப்பிரகாரம் யார் குற்றவாளி என்பது கேள்வி? ஒருவன் செய்த குற்றத்திற்காக அவன் தண்டிக்கப்படவேண்டிது நியாயமானல் கொலை செய்யப்பட்டவன் அவன் தண்டனையை அடையவில்லையா? தண்டனை அதிகமானதா? ஆனல் அந்த சிறுவன் மீது அந்த சாமியார் வேண்டும் என்றே நல்ல நினைவுடன் செய்த குற்றமும் அதிகமானதுதானே? அச்சிறுவன் வேறு வழியில்லாமல் இந்தக் குற்றத்தைச் செய்தான் என்பது விளங்குகிறது. அச்சிறுவன் சாமியாரின் இஷ்டத்திற்கு உள்பட விரும்பாவிட்டால் அவனைவிட்டு ஓடிப்போய் இருக்கலாம்.

ஆனால் அவ்வாறு செய்வது சாமியாரின் வெறுக்கத்தக்க செய்கையை மன்னித்ததுபோல் ஆகும். பையனுக்கு தினசரி உணவு கொடுத்ததற்காக அவனிடம் இருந்து இந்த துர்ச் செய்கைக்கு உட்படவேண்டியது ஒழுங்கானதுபோல் தோன்றும். வேறு வழியில்லாத கஷ்டதிசையில்தான் அச்சிறுவன் சாமியார் தொழிலுக்கு முன் வந்தான். ஆகையால் இந்த தொழிலின் சுலபமான பிரயோஜனத்தை அவன் விட்டுவிட் விரும்பாதது இயற்கை. சாமியாரின் வக்ரபுத்தி அச்சிறுவனிடம் இருந்து இந்த விளைவை எதிர்பார்த்தது. அச்சிறுவன் முதலில் இருந்து தானாகவே இந்த நிபந்தனையை ஒப்புக் கொண்டிருந்தால் அது வேறு விதமாய் இருந்திருக்கும். அவன் அவ்வாறு செய்யவில்லை என்பது வெளிப்படை. எங்கும் கிடைக்காத வேலைக்காக மறுபடியும் தேடி அலையவேண்டும் என்ற பயத்தினால் அவன் இந்த அருவருக்கத்தக்க செய்கைக்கு உட்பட்டான். வெறுப்புடன் தன்னுடைய ஆகாரத்தின் கூலிக்காக சாமியாருக்கு உட்பட்டிருந்த போதிலும் அவன் சாமியாரை வெறுக்க ஆரம்பித்தான. தன்னுடைய வெறுப்பைக் காண்பிப்பதற்காக அவன் சாமியாரைக் கொலை செய்தான், சாமியார் கொலை செய்யப்பட்டது அவனுடைய துர்நடத்தைக்குச் சரியான தண்டனையே.

பிரம்மசரியம் என்ற மிகவும் தற்பெருமையான போர்வையால் தங்களை மூடியுள்ளவர்கள் காம இச்சையை நீக்க நெறி தவறிய இயற்கைக்கு மாறான முறையை அனுஷ்டிக்கிறார்கள் என்பதை இந்த வழக்கு நிரூபிக்கிறது. பிரம்மசரியத்தின் அனுஷ்டானம் அசாதாரணமான பழக்கத்தில் விடுகிறது. இயற்கையை ஏமாற்றமுடியாது. மதவைராக்யம் உள்ளவர்களின் இயற்கையின் விதியை வெல்லலாம் என்கிற அகம்பாவமான எண்ணம் கபடவேஷத்தையும் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதையும் தான் உண்டாக்குகிறது. பிரம்மசரியத்தை உபதேசிப்பதுடன் உண்மையாக அனுஷ்டிக்கும்

சிலர் சரியான மனோசக்தியை இழந்து சாமிபிடித்தல், இயற்கையாக இல்லாத விஷயங்களை காண்பதுபோல் நினைத்தல், நினைவிழந்து மயக்கமாய் படுத்திருத்தல் முதலியவற்றிற்கு இரையாகின்றனர். ஆனால் இவற்றை பக்தியின் பலனுக் மற்றவர்கள் பெருமை செலுத்துவார்கள். இச்சையை அடக்குவதால் அவர்களுடைய மனது அதிர்ச்சியடைந்த நிலையையடைகிறது. இயற்கை தன் விதியை மீறியவர்களின் மீது பழி வாங்குகிறது.

ஆனால் பிரம்மச்ரியத்தை அனுஷ்டிப்பதாகச் சொல்பவர்களில் மிக அதிகமானவர்கள் உண்மையாக அதை அனுஷ்டிக்காமல் பலவேறுபட்ட வக்கிர வழிகளில் தங்கள் இச்சையைப் பூர்த்திசெய்து குற்றங்கள் செய்யப்படுவதற்கு காரணமாகிறார்கள். இந்தக் கதையில் வரும் சாமியார் அச்சிறுவனைக் கொண்டு தன் இச்சையைபூர்த்திசெய்யாமல் ஒரு? தவடியாள் வீட்டிற்குச் சென்று அதை தணித்திருந்தால் அது சற்று கேவலக் குறைவானது அல்லவா? ஆண் ஆணைக் கொண்டும், பெண் பெண்ணைக் கொண்டும் இச்சையைப் பூர்த்திசெய்வது கூட அவ்வளவு ஒழுக்கத் தவறுதலாகச் சொல்லமுடியாது. அது உணர்ச்சியின் ஒருவித வியாதியேயாதலால் அதற்குத் தகுந்த சிகிச்சை செய்யப்படவேண்டியது. ஆனால் நம்முடைய சாமியார் மனோவியாதியால் இவ்வித செய்கையைச் செய்யவில்லை. இது செலவு குறைவானது என்பதற்காகவும், ரகசியமாகவும், அதிக சௌகரியமாகவும் செய்ய முடியும் என்பதற்காகவும் இதை கையாண்டார். ஆகையால் இது ஒழுக்க விரோதமான ஒரு செய்கை; இதை அனுஷ்டிப்பவர்கள் மத வேஷத்தில் மோசத்தைச் செய்யும் கேவலமான குற்றவாளிகளாகக் கருதப்படவேண்டும். பகுத்தறிவு உள்ள எவரும் கௌரவமான தொழிலின் பெயரால் இத்தகைய கேவலமானதும் கேவலத்தை உண்டாக்குவதுமான பழக்கங்களை ஆதரிக்க முடியாது.

இந்தியா மட்டுமல்லாமல் எங்கும் குற்றங்கள் சமூக வியாதியின் அடையாளங்களேயாகும். உலகத்தின் எல்லா பாகங்களிலும் எல்லாக் காலங்களிலும் அவை அப்படியே இருந்தன. அவைகளை அவ்வாறு கருதாமல் அவைகளை மதத்தின் பெயராலும், சமூக சட்டதிட்டங்களின் பெயராலும், ஒழுக்கத்தின் பெயராலும் குரூரமாக அடக்க முயற்சிக்கப்பட்டது. இந்த முயற்சிகள் தோல்வியடைந்ததில் ஆச்சரியமில்லை. குற்றங்களைத் தடுப்பதற்கு எத்தகைய கடுமையான முறைகளைக் கையாண்டாலும், அவற்றைத் தண்டிக்கத் தகுந்த முறையில் நியாயஸ்தலங்களை ஏற்படுத்தினலும் முட்டாள்தனம், மூட நம்பிக்கை, காட்டுமிராண்டித்தனம், பலாத்காரத்தினல் அடக்கப்படுதல், வறுமை, பொதுஜனங்களின் நிலை இவைகளை அடிப்படையாகக்கொண்டு ஜாதி வித்தியாசம், ஆண் - பெண் உயர்வு, ஏழை-பணக்கார ஏற்றத்தாழ்வு இவைகளுக்கு இடங்கொடுக்கும்படியாக சமூகம் இருக்கும் வரையில் குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதில் வெற்றியடைய முடியாது. சமூகம் எவ்வளவு மோசமாக இருக்கிறதோ அவ்வளவு அவலக்ஷணமாயும், அதிகமாகப் பரவியும் குற்றங்கள் இருக்கின்றன. இந்தியாவிலும், வேறு தேசங்களிலும் குற்றங்கள் பலவற்றிற்கு செல்வ நிலையின் ஏற்ற தாழ்வு, வறுமை முதலியவை காரணமாயிருக்கின்றன. ஆனல் விசித்திரமான இந்திய சமூக அமைப்பு சில தனி ரகமான குற்றங்களுக்குக் காரணமாயிருக்கிறது. அதே மூலத்தில் உற்பத்தியான இன்னொரு விசித்திரமான காரணமும் இருக்கிறது.

ஒவ்வொரு தேசத்திலும் சட்டரீதியான தண்டனைகள் அத்தேசத்திலுள்ள மதங்களினலும், ஒழுக்க விதிகளினலும் ஆமோதிக்கப்படுகின்றன. ஆனல் சாதாரணமாக குற்றவாளி பலம்பொருந்திய சட்டத்துக்கு தலைகுனிந்தாலும், மத விதியையும் ஒழுக்க விதியையும் எதிர்க்கிறன். ஆனல் இந்தியாவில் குற்றவாளியின் தண்டனையை அவனுடைய மனேபாவ

மும் ஆமோதிக்கிறது. சட்டம் தவருக அவனைத் தண்டித்தாலும்போலீசார் சந்தேகத்தின்மேல் பொய்க்கேசுஜோடித்து அதனால் குற்றமற்றவர் தண்டனையடைவது அபூர்வமல்ல. அவனுடைய மனம் இது ஞாயமானது என்றே அவனைச் சமாதானப்படுத்துகிறது. அவனுடைய வாழ்க்கையில் நடக்க வேண்டியதெல்லாம் விதியாக அவன் தலையில் எழுதியிருக்கிறது—அவை அவனுடைய பூர்வகர்மாவின் பலன். அநியாயத்தை எதிர்க்காமல் அவன் தெய்வநியதி என்று ஏற்றுக்கொள்கிருன்.

விதிப்பயன் என்று கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளும் அவனுடைய மனோநிலை அவனைக் குற்றம் செய்யும்படி தூண்டிய சமூக திட்டத்தையும், சில சமயம் அவன் குற்றம்செய்யாமல் இருக்கும் பொழுதே தண்டித்த சட்ட அநியாயத்தையும் தன்னுடைய பூர்வ ஜென்மத்துப் பாவம் என்று தன்னைத் தானே நொந்துகொள்ளும்படி செய்கிறது.

குற்றம் செய்யாத பல மனிதர்கள் நீண்ட சிறைகால தண்டனையை அநுபவித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இருப்பினும் அநியாயமாக அவர்கள் தண்டிக்கப்பட்டதைப்பற்றி அவர்களுக்குக் கொஞ்சமாவது கோபமாவது, வருத்தமாவது தோன்றவில்லை. சமூக திட்டத்தைப் பற்றியும், சமூகக் குற்றத்தைப்பற்றியும், சட்டநீதி அவர்களைத் தவருகத் தண்டித்ததைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னுல் அவர்கள் பக்தியுடன் தலையில் கைவைத்துக் கொள்கிருர்கள். அன்று எழுதிய விதியை மாற்ற முடியாது. அதைக் குறைகூறி பயன் இல்லை. அவ்வாறு செய்வது பாவமும் ஆகும் என்று தங்களுடைய கஷ்ட நிலைக்கு அவர்கள் தங்கள் மனதைச் சரிப்படுத்திக்கொண்டு எல்லாம் ஈஸ்வர சித்தம் என்று சொல்கிருர்கள். ஆனுல் அநியாயத்துக்கு ஒருவன் தலைகுனிவது தெய்வபக்தியல்ல. இது

ஒழுக்க உயர்வைப்பற்றியும், சட்ட நியாயத்தைப் பற்றியும் அதிக மதிப்புக்கொள்ளாததே யாகும். இந்த கேவலமான மனோநிலை நமது தேசத்தில் நமக்கு பரம்பரையாகக் கிடைத்த உயர்ந்த கலை என்று சொல்லப்படுகிறது.

இங்கு சமூகக் கொடுமையையும், சட்ட அநியாயத்தையும் மதம்சரியென்று ஏற்றுக்கொள்ளும் ஆயுதமாய் இருக்கிறது. இந்தியர்களின் முதுகெலும்பை மத வைராக்கியமும், தெய்வ பக்தியும் முறித்துவிட்டது. அநியாயத்தை எதிர்ப்பது மனித இயற்கையின் சிறந்த குணம். அது நசுக்கப்பட்டுவிட்டது. கஷ்டங்களுக்குப் பணிவது இந்தியர்களின் தனிப்பட்ட குண மாகிவிட்டது. அது முன்னேற்றத்தைத் தடுத்து அவர்கள் உயிரோடு இருக்கும்போதே அவர்களை இறந்தவர்களாய் ஆக்கிவிட்டது. இந்திய சிறைச்சாலைக்குச் சென்றால் ஆயிரக் கணக்கான இரக்கப்படவேண்டிய மனிதர்கள் சட்ட அநியா யத்தினாலும், சமூகக் கொடுமைகளாலும் அக்கிரமமாகத் தண் டிக்கப்பட்டிருப்பினும் கர்மபலன் என்ற மூட நம்பிக்கையால் ஆறுதல் அடைந்திருப்பதைப் பார்க்கிறோம். வெளியில் இருப்பவர்கள் கரடுமுரடான உண்மையைச் சோதித்துக் கதைக்கும் உண்மையான சம்பவங்களுக்கும் தாரதம்யம் கண்டுபிடித்து இவர்களுடைய நிலையைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

இந்திய குற்றவாளிகளின் மனோநிலையைக் கவனித்தால் கர்மா என்ற கொள்கையின் உண்மை தெரியவரும். இந்த மதக்கொள்கை தெய்வநீதிப் பிரகாரமும், ஒழுக்கநீதிப் பிரகார மும், மோசமானது. மதம் அறியாமையை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவின் பெரும்பகுதியானவர்கள் மூடநம் பிக்கையையும் தெய்வக் கொள்கைகளையும் சரி என்று ஒப்புக் கொள்ளவேண்டும் என்பதற்காக மூடர்களாகவே இருக்கும் படி செய்யப்படுகிறார்கள். இந்தியாவின் எதிர்காலத்திற்கே

இது ஒரு தடையாக் இருக்கிறது. மக்களின் பெரும்பகுதியைக் கவனித்த வரையில் நமது மதக்கலையும், ஒழுக்கக்கலையும் மூட்டாள்தனத்தையும், மூட நம்பிக்கையும், விதி என்று கொள்வதையும் தான் குறிப்பிடுகின்றது. இவ்வாறு மனோபாவத்திலும், ஒழுக்கக் கொள்கையிலும், பின்னணியில் இருக்கும் ஒரு தேசத்திற்கு நல்ல எதிர்காலம் இல்லை. நமது கலை பொறுமையைச் சிறந்த குணமாகக் கற்பிக்கும் வரையில் நமது நிலை வேறு எவ்விதமாக இருக்க முடியும். இதில் அதிசயம் என்னவென்றால் இந்த தேசத்தின் விடுதலைக்காக போராடும மகான்கள்கூட விடுதலைக்கு எதிராக் இருக்கும் நமது இந்தக் கொள்கையை ஒரு சிறந்த குணமாக தோத்திரம் செய்கிறார்கள். இதனால்தான் இந்த தேசத்தின் விடுதலைக்காகச் செய்யும் போராட்டம் சக்தியற்றதாகவும், பயனற்றதாகவும் இருக்கிறது. புரட்சியும், பணிதலும் மாறுபட்ட குணங்கள். தேசத்தின் விடுதலைக்காகச் செய்யும் போராட்டத்தின் முதல்படி பச்சவாதத்தைப்போல் நமது கைகளைச் சக்தியற்றதாகச் செய்திருக்கும் இந்த பழைய கொள்கைகளிலிருந்து நம்மை விடுவிப்பதே ஆகும். இறந்துபோனவர்களின் கொள்கைக்கு உண்மையாய் இருத்தல் உயிரோடு இருப்பவர்களின் நன்மையை துரோகம் செய்வதேயாகும். பழமையின் கைதி எதிர்காலத்தை எப்பொழுதும் ஜெயிக்கமுடியாது.

நீங்கள் படிக்க வேண்டியவை!

வெளி வந்தவை.

கோவிலைத் திறவுங்கள்
(3-ம் பதிப்பு அச்சில்)

★ சுதந்திரப்போர்
(நேதாஜியின் அற்புத வரலா
விலை 1-4-0 தபாற் செலவு 0-3-0

இனி வருபவை.

நேரு குடும்பம்
இலக்கியச் சிற்பிகள்
ஆசாபங்கம் (நவீனம்)

★ சலோ டில்லி
நேதாஜியின் முக்கிய பிரசங்கங்கள்

★ அற்புத அரசியல் சித்திரம்

★ திருக்கோவிலூர்
ராஜகோபாலன் எழுதியது

தியாகக்கொடி பதிப்பகம்,
துறையூர், திருச்சி ஜில்லா

எரிமலையின் தீப்பொறி இரண்டு!

பழமைப் புழுக்கள் நெளியும் இன்றைய
இந்து சமூதாயத்திற்கு
இதோ

★ "சாவோலை" ★

தயாராகிவிட்டது.

தில்லை வில்லாளன் எழுதியது.
விலை அணு 12.

ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.
தபால் செலவு தனி.

எரிமலைப் பதிப்பகம்,
துறையூர், திருச்சி ஜில்லா.

SCANNED

PRINTED AT SRI NATARAJA PRESS, TURAIYUR. P. I. C. TY. 46.